தனிப் பிரதி விலை அணா 0—1—6

Reg. No. M. 3066. 1936-ஜூலை 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் II. இதழ் 3.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், காடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0 —0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலைமாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

முன்னேற்றம் (பாட்டு) (சாமி சிதம்பரனார்)	1
தானத்திற்கு பாத்திரன் யார்? (கைவல்ய சாமியார்)	3
மதம் என்பது என்ன? (அறிஞர் இங்கர்சால்)	9
கற்பொழுக்கம்.	20
யந்திரங்கள் வேண்டாமா?	29
பேதம் போக்குவீர்! (பாட்டு) (எஸ். சிவப்பிரகாசம்)	38
மூடநம்பிக்கையைவிட நாஸ்திகம் சிறந்தது. (ஆங்கில அறிஞர் பேக்கன்)	39
பெற்றோருக்குச் சில உபதேசங்கள் (இங்கர்சால்)	42
இயற்கை கொடியதா? (தோழர் எம். டேஷம்பர்ட்டு)	46
பிள்ளை—தீக்ஷிதர் சம்பாஷணை (சோமசுந்தரி)	56
பெண்களின் சிருங்காரம் (கே. எஸ். நாதன்)	60

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையர்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. } சுறவு 1936 ஜூலை 1. { இதழ் 3.

முன்னேற்றம்.

(சாமி. சிதம்பரனார்.)

"பாண்டியன் கன்ற மீனாட்சி" என்பது போல
பாட்டு.

காடுவோம் உண்மை முன்னேற்றம்—இதனை
கானும் கீர் போற்றும்!
கூடினால் ஒற்றுமை தோற்றும்;—அடிமை
குலையுமே தேற்றம். (காடு)

தொகை.

கமதுரிமை யறியாமல் வாழ்கின்ற வாழ்வினால்
கலமென்ன இங்கு சொல்வீர்!
சமரச மொடுகூடி மனிதர்கள் ஓரு குலம்
ஆவதே இன்பம் கண்டீர்!

பாட்டு.

காணுவோம் மதஞ்செய் சூது;—பிறகு
வைதீகம் இங்கேது?
பேணுவோம் அறிவென்றோது;—இன்றேல்
பெருகுமே தீது; (காடு)

தொகை.

காட்சிக்கும் யூகைக்கும் ஓவ்வாத பொய்யுரைகள்
கழறிடும் குருக்கள் மாரால்
மாட்சிவரும் எனகம்பி ஏமாந்து துன்புறும்
மடமையை மாள வைப்பீர்!

பாட்டு.

சிறுவோம் வஞ்சகர் காட்டும்—சாத்திரம்
சொல்லும் பொய்க் கூட்டம்;
சேருவோம் சுதந்தர காட்டம்;—அதே நம்
சிறுமையை ஓட்டும். (காடு)

"மதமும், கடவுளும், அடுத்த ஜென்மமும் ஒழிந்தாலொழிய இந்தியா பொருளாதாரத்துறையில் எந்தாளும் சீர்படப் போவதில்லை. அதற்குப் பதிலாக தரித்திரமும், கவலையும், இழிவும், பஞ்சமும், நோயும் இந்தியாவுக்கு நிரந்தர சொந்தமாகும்"

"ஆழ்வார்கள் கதைகளும், நாயன்மார்கள் சரித்திரங்களும் பார்ப்பனப் பிரசாரத்திற்கென்றே கற்பிக்கப்பட்டு பார்ப்பன அடிமைகளைக் கொண்டு பரப்பப்பட்டதாகும்."

ஈ. வெ. ரா.

தானத்திற்கு பாத்திரன் யார்?

(கைவல்ய சாமியார்)

ஈ. வெ ராமசாமி இந்து தர்மத்தை அழிக்கவந்திருக்கிறானென்று பழிசுமத்துகிறார்கள் ஈ. வெ. ராமசாமி கூறுவது இந்து வேதசுருதிகளின்தர்மத்திற்குப்பொருந்தினாலும் பார்ப்பனர்களின் இந்து தர்ம இலைசக்கும் அவர்கள் பழக்க வழக்கங்களுக்கும் காரிய லாபத்திற்கும் பொருத்தமாயிருப்பதால் பார்ப்பனர்கள் குற்றம் காண்பதில் ஆச்சரியமில்லை. பார்ப்பனர்கள் சிலேகித்தத்திற்கும் முகஸ்துதிக்கும் தயவிற்கு ஆசைப்பட்டிருப்பவர்கள் பின்னே மற்றவர்கள் போவதானது, இனியும் நம்மனித சமூகத்தை மூடநம்பிக்கையில் சேர்க்குமே ஒழிய தேசத்திற்கு ஒரு நன்மையையும் உண்டு பண்ணாது. யார் எப்படிச்சொன்னாலும் உலகம் பரந்தது, அகில் அறிவும் பரந்து கிடக்கிறது. கல்வியும் வியாபிக்கிறது. கம்மவர்களுக்குள் விசாரணையும் நுழைந்து கொண்டிருக்கிறது. இவையனைத்துமிருந்தாலும் எழுதுமை கொட்டி வைவோர் எப்பொழுதுமிருப்பார்கள்.

அறியாமையால் கட்டும், அறிவினால் விடுதலையும்கைகூடும் என்பதை நம் முன்னோர்கள் அறிவார்கள். தன்னை சர்வத்திலுமிருந்து பிரிவாகக் காணுதலும் உலகமும் தானும் ஒன்றெனக் காணுதலுமே உண்மையறிவு. இத்தனை பெரிய உண்மையைக் கண்டுபிடித்த பெரியவர்களை ஈ. வெ. ராமசாமி குற்றம் சொல்லார். உண்மையும் சத்தியமுமான பெரியவர்களின் விதிகளையெல்லாம் மறைத்து உண்மைக்கும்பொய்க்கும் ஒப்பந்தம் உண்டாக்கி, பாகச்சுவர்போட்டு, கர்மமென்றும், ஆசாரமென்றும், அபிஷேகக்கிரிகைகளென்றும், சொல்லி அவசியமாய் மனிதன் செய்ய வேண்டிய தர்மத்தில குறுக்கிட்டு, தாழ்ந்தோர், சோயாஸி, கல்வி, தொழில் முதலியவைகளில் செல்வவான்கள் சொல்லுவதையும் தடித்து ''தர்மமென்பது வேறு; தானமே முக்கியம்! அதுவே தேவர்களுக்குத்திருப்தி!! அதுதான் இந்து தர்ம சாஸ்திரத்தில் விசேடமாகச் சொலலப்

பட்டிருக்கிறது!!! அதுவும் பிராமணனுகளுக்கே கொடுக்க வேண்டும், அதனால் எல்லா போகங்களும் சொர்க்கமும் வந்து விடும்'' என்று சொல்லி அவற்றிற்காகச் சொல்லப்பட்ட உண்மைப் பிரமாணங்களையும் மறைத்து, கஞ்சாக்கடைப் பார்ப்பானிலிருந்து சங்கராச்சாரி மடத்து கொள்ளை கொள்ளும் பார்ப்பான் வரையிலும் தானத்திற்கு அதிகாரிகளென்று வந்து ''அவன் தானம் செய்ததினால் தான் ஆண்குழந்தை பிறந்தது; இவன் தானம் செய்ததினால் தான் எத்த ஊர்வக்கீல்களும் என்ன கொடுத்தாலும் எத்த கேசுக்கும் வருகிறார்கள்; எவனும் அவனவன் சக்தியானுசாரம் செய்யவேண்டும், அவன் தானம் செய்யாததினால் தான் விஷ்ணுவே மோகினியாக வந்து மூகுந்தசூரனாகச் சபித்தார். இவன் தானம் பண்ணாமல் பிராமணர்களை அவமதித்ததினால் தான் இரணியசுவாகப் பிறந்தான். எவன்னங்களுக்குக் கொடுக்கவில்லையோ அவன் சல்லாபாக்கியமும் கெட்டுப்போவதோடு பிதிர்லோகத்திற்கே போகமாட்டான்'' என்னும் கதைகளைச் சாஸ்திரமென்று பாப்பி, அதுவே இந்து தர்மமென்று சொல்வதையே ஈ. வெ. ராமசாமி ஒழிக்க வேண்டுமென்கிறார்.

வேள்வி.

வேள்வியும், அதைச் செய்யும் பிராமணனும், அதை ஏற்றுக்கொள்ளும் தேவதையும், சந்தஸ்டிரங்களும், அதற்காகத் தானங்களும் தர்மசாஸ்திரமென்னும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் இந்து தர்மங்களில் முக்கியமானவை 'எவன் வேட்பித்தலாகிய மந்திரங்களில் இருடி, தேவதை, சந்தசு, பிராமணம், இவற்றைத் தெரிந்து ஒவ்வொரு மந்திரத்திலும் மேற்கொண்டு செல்லுகின்றானோ அவன் தீர்க்காயுளையடைகிறான்; புகழுடையவனாகிறான். சிறக்தோனாகின்றான்'' என்று ஸ்மிருதிகள் சொல்லுவதால் வேள்வியும் தானமுமே தர்ம சாஸ்திரப் பிரகாரம் கடக்கிறதா? அழுக்கு ஒழுக்கமில்லாத பார்ப்பனர்களுக்கே வழங்கப்படுகிறதா? என்பதைக்கவனித்துப்பாருங்கள் என்கிறாமசாமிசொல்லுகிறார்.

'வேட்பித்தலே பாவம்' என்பது பூர்வ சித்தாந்தம். யார் வேள்வி செய்விக்கிறானோ எந்த வேள்விக் காரியத்தில் வேட்பித்தலை செய்கின்றானோ அவன் வேதங்களைப் பழிக்கின்றவனாகிறான். எந்த வேள்விக்காரியத்தினால் வேட்பித்தலைச் செய்கின்றானோ அவன் காட்டிற்குச் சென்று பரிசுத்தமான இடத்தில் அந்த வேதத்தையே ஓதிக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியது. அவனுக்கு உணவை ஒழித்தலே தீவை

யாகும். அசைவற்றிருத்தலே "உபசதம்" என்னும் வேள்வி அங்கமாம். அவனது வாக்கே 'ஜு'வென்னும் ஓமபாத்திரமாம். அவன் மனமே "உப்பிருது" என்னும் வேள்விக்கருவியாகிய பாத்திரமாம். அவனது மன வூக்கமே "துரூப" என்னும் நெய் வார்க்கும் அகப்பையாம். பிராணனே அவிசாம். சாமவேதமே "அத்வரியு" என்னும் இருத்விக்கு. இங்ஙனம் கூறப்பட்ட பிரசித்தியையுடைய வேள்வி பிரணனே தக்ஷிணையாக உடையது" என்னும் வேள்வியின் தத்துவத்தின் சுருதி வாக்கியமும் இருந்தாலும் வேட்பித்தலும் தானம் வாங்குதலும் பழிக்கப்பட்டிருந்தாலும், வேத பாராயணமும் காயத்திரி ஜெபமும் செய்வது பிராயச்சித்தமென்று வேதத்தால் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவை ஒவ்வொரு யாகமுடிவிலும் தர்க்ஷிணை முடிவடையாமல் பல வேறு பாத்திரங்களையுடைய ஆபிப்பிராயங்கள் நிறைந்த சாஸ்திரங்களாக நிறைந்து கிடக்கின்றன. எந்தக் காரியத்திற்கும் பார்ப்பனர்கள் தமம் வளர்த்துவதே வேள்வி; அதற்காகக் கொடுக்கப்படுவதே தானம். சின்னதற்குச் சிறியதும் பெரியதற்குப் பெரிய அக்கினி குண்டமுமாகும். பிராயச்சித்தத்திற்கு இப்பொழுது பார்ப்பனர்கள் மூக்கையும் தண்ணீரையும் தொடுவது போன்றதல்ல காயத்திரி. உண்டியை ஒழித்து முக்காலும் வேத முழுவதும் பாராயணம் செய்ய வேண்டியது. மூன்று வேளையிலும் மூன்று இரவிலும் மூன்று பாகத்தோடு கூடின காயத்திரி மந்திரத்தை பிராணாயாமத்தோடு அப்பியாசம் செய்து ஜெபிக்க வேண்டியது. அப்பொழுது சுத்தமடைகிறான். இனி தான பாத்திரவிதியை இந்த தருமமான பாசுவெளியீட்டில் விரித்தவைகளைச் சொல்லுகிறேன்.

தானவிதி.

"கோடோதும் தானஞ் செய்ய வேண்டியது. அது தக்க பாத்திரத்தில் தானே செய்ய வேண்டும் நிமித்தமுண்டான போது விசேடமாகச் செய்ய வேண்டியது. இப்பவனையும் தானஞ் செய்யப்படும். தனது சக்திக்குத் தக்கபடி சாத்தை போடி கொடுக்கவேண்டும். சற்பாத்திரமானவர்களைப் பூஜித்து தசதானத்திற்குரிய பசு, பூமி, எள், பொன், நெய், ஆடை, தானியம், வெள்ளி உப்பு, முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். தனக்கு கன்மை வேண்டுமென்று விரும்பின அறிவுடையோன் தகாதவனுக்கு ஒரு சிறிதும் கொடுக்கலாகாது."

தானபாத்திரம் வருமாறு.

"கீழ் விழுதலின்று தப்புவிப்போன் யாரோ அவன் பாத்திரமென்னப்படுவான்" யாஞ்ஞவற்கியஸ்மிருதி "தானத்தைப் பெற்றுக்கொள்ளுந்தரம் கல்வி யொன்றினாலே அமைவதல்ல. தவத்தாலுமன்று. பின் எதனால் எனில், யாரிடத்து கல்லொழுக்கமும் அக்கல்வியும் தவமும் கூடியிருக்கிறதோ அவனே தானம் பெறத்தக்க இடமாவான்" என்று கூறுகிறது.

இயமன் என்னும் இருடி, "கல்வியுடையவன் புண்ணிய சீலமுடையவன், மனச்சாந்தியுடையவன், பொறுமையுடையோன், ஐம்பொறிகளை வென்றவன், மெய் கூறுவோன், பிறர் செய்த தன்றி மறவாதவன், வேதமுணர்ந்தவன், தருமமுணர்ந்தவன், பசுக்களைக் காப்பவன், இவ்வளவு குணமுடையவனாக இருந்து, தானே கொடுப்பவன் யாரோ அப்படிப்பட்ட வேதியன் தானத்தை வாங்குவதற்குத் தக்கவன்" என்றார்.

விதிஷ்டர் "வேதமுணர்ந்தவன் சிறிது தக்கோனெனக் கூறப்படும். தவமுடையோனும் சிறிது தக்கோனாவான். யார் வாயில் சூத்திர சம்பந்தமான அன்னம் விழுகின்றதில் லையோ அவன் பாத்திரமென்னும் தக்கோருக்கெல்லாம் சிறந்த தக்கோனாம்" என்றார்.

இயமன் என்னும் இருடி, "ஆன்மாக்களின் உற்பத்திநாசமும், போக்குவரவும், அறிவும், அறிவுடைமையும் யார் அறிந்திருக்கிறாரோ அந்த வேதியனே வேதத்தை உணர்ந்தவன்" என்றார்.

பராசர், "தானம் பெறத்தகாதவர்கள் வறியவரேயாயினும் பலாடவிரதம் உடைய வேதியனுக்கும், பகவிருத்தியுடைய பாவிக்கும், வேதத்தையறியாதவனுக்கும், தருமத்தையுணர்ந்தவன் தானத்தைக் கொடுக்கலாகாது. விதிப்படி தான் தேடிய பொன்னை இம்மூவருக்கும் கொடுத்தால் கொடுத்தவனுக்குக் கேடுண்டாகும்; மறுமையிலும் ஒன்றும் கொடாதவனே யாவான்" என்கிறார்.

பைடால விரதமாவது, "எவன் யாதேனுமொரு நிமித்தத்தை முன்னிட்டுக்கொண்டு ஒரு விரதத்தை அனுஷ்டிக்கி

றானோ அவன் விரதத்தால் தன் பாவத்தை ஒளித்து வைத்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு ஒன்றும் கொடுக்கப்படாது" என்பதாம்.

பகவத்தியிலக்கணமாவது, "கீழ் பார்வையையுடையவன், வஞ்சகன், தன் பயனைத் தேடிக்கொள்வதிலேயே கருத்துடையவன், அடக்கமுடையவனைப்போல பொய்யாக நடிப்பவன், எவனோ இந்த பார்ப்பான் பகவிருத்தியுடையவனாவான்" என்பது.

சதாபத பிராமணம், "தேவலனுக்குக் கொடுத்த தானம் நஷ்டத்தையடையும்; வட்டியால் ஜீவிக்கிறவனுக்கு செய்த தானத்தால் உயர்ந்த நிலைமை கெட்டுப்போம்; வியாபாரம் செய்கிறவனுக்குக் கொடுத்தால் அது இம்மை, மறுமை இரண்டிற்கும் பயனைத்தராது வீணாகும், எந்த அந்தணன் பொருளை இச்சித்து மூன்று வருடம் அண்ணியனுக்காக தேவர்களை பூசிக்கிறானோ அவனுக்கு தேவலகனென்று பெயர். அவன் தேவகருமங்களிலும பிதிர் கருமங்களிலும் தகாதவனென்று இகழப்பட்டான்" என்கிறார்.

வீணாய்விடும் தானமாவன.

"முதல், அண்ணியர் வாசம் செய்யுமிடத்தில் கொடுத்த எல்லா தானமும், மேல் நிலைக்குச்சென்று நிலை தவறி கீழ் நிலைக்கு வந்தவனுக்கும், பிராமண ஒழுக்கம் கெட்டவனுக்குமகொடுத்த தானமும், திருடன், வஞ்சகன், செய்நன்றி மறந்தவன், சூருவுக்கு விருப்பம் செய்பாதவன், பிராமப் புரோகிதன், வேதத்தைத் கூலிக்குச் சொல்லுகிறவன், உபாத்தியாயர், பரிசாரகன் தானத்திற்கு வழி உண்டாக்கி அதற்கே காத்திருப்பவன், இவர்களுக்கு கொடுக்கும் தானமும் கெட்டு, கொடுத்தவனும் கெட்டு நரகத்தையுமடைவான்."

சூற்றத்தினர்களுக்கு அளிக்கும் தானம்.

பராசர், "தாய் தந்தையருக்கும், தமயன் தம்பியருக்கும், தமக்கை தங்கைகட்கும், தன்பெண்களுக்கும், மனைவிக்கும், புத்திரருக்கும் கொடுத்தவன் நிச்சையில்லாமலே சுவர்க்கத்தையடைவான். தன் பொருளைத்தந்தைக்குக் கொடுத்தால் நூறு பங்கு விசேடம்; தாய்க்கானால் ஆயிரம்பங்கு விசேடம்; மக

லுக்கானால் முடிவேயில்லாத விசேடம்; உடன் பிறந்தாருக்குக் கொடுத்தால் என்றும் கெடாது வளரும்" என்கிறார்.

இன்னும் "வேதியருக்கு மாத்திரமே தானம் கொடுக்க வேண்டுமென்பது விரதமாகக் கொண்டால் எல்லாவிடத்திலும் அது சிறந்ததல்ல. தன்னுடன் பிறந்த பெண்கள், அவர்கள் பிள்ளைகளாகிய மருமக்கள்மார், அம்மான்மார், தந்தையுடன் பிறந்த அத்தையார், மற்றும் வறியவர்களாகவிருக்கிற தன் சுற்றத்தார் முதலியவருக்கு கொடுத்தால் அதனால் வேதியனுக்குக் கொடுப்பதை விட கோடி பங்கு அதிகமான பலன் உண்டாகும்" என்கிறார்.

இவையனைத்தும் ஸ்மிருதி என்னும் இந்து தர்ம சாஸ்திரங்களிலுள்ளவை. இதில் சொல்லியிருக்கும் வேதியனிருந்தாலல்லவோ இந்து தர்மமிருக்கும்; அவன் அனைத்தும் அன்னியசாதக படிப்பவன். எப்போழுது அன்னிய சாதக படித்தானோ அன்றே வேதியன் என்பதினின்றும் தள்ளப்பட்டான். வைதிக பார்ப்பான் கூட தான் வைதிகம் என்று சொல்லி சம்பாதிக்கும் பணமெல்லாம் தன பிள்ளை குட்டிகளை அன்னிய சாதக படிக்கவே உபயோகப்படுத்தியும் வந்து, உத்தியோகங்களுக்குச் செய்யாத அடிமையெல்லாம் செய்து, இந்து தருமங்களில் எதாவது கெடாமலிருந்தாலல்லவா காங்கள் போய்க் கெடுக்க வேண்டியதாயிருக்கும்.

இந்து தர்ம சாஸ்திர ஸ்மிருதிகளின்படி உத்தம வேதியன், இல்லாதொழிந்தமையால் கேடுகெட்டவனே வேதியன் என்று கடிக்கிறான் அவனுக்குக் கொடுத்துத் தன் குடும்பமும் கெட்டு காகத்திற்கும் போவதைவிட இந்து தர்ம சாஸ்திரப்படி தன் ஏழைச் சுற்றத்தாருக்கு கொடுப்பதே விசேடமென்று சொன்னால் இந்து தர்மத்தைக் கெடுப்பவர்கள் ஆவேசமா? இந்து தர்மத்தை காப்பிக்கடை ஒன்று செய்கிறது, உள்ளுக்கடையழிக்கிறது, கஞ்சாக்கடை சூரிக்கிறது; இங்கிலீஷ் காகரிகம் எங்கு பார்த்தாலும் சூழ்ந்து கொண்டது. சூப்பும், முட்டையும் இல்லாமல் டாக்டர்கள் உடம்பு தேராதென்கிறார்கள்; சீமையைப் போல் ஒரு காசு மருந்தை ஒரு ரூபாய்க்கு விற்கப் பழகி விட்டார்கள். ஞாயக் கோர்ட்டில் வாதிப்பவர்கள் பணம் வாங்கினாலும் பத்தாது என்று சொல்லுகிறார்களே ஓழிய கோர்ட்டுக்குப் போவது வெகு கஷ்டம். இத்தனை பேருக்கும் மத்தியில் அழிக்கும்

மதம் என்பது என்ன?

(அறிஞர் இங்கர்சால்)

கம்மிடமுள்ள சன்மார்க்க ஞானம் (அதாவது மனச் சாட்சி) என்று சொல்லப்படுகிற ஒரு சொல்லைக் கொண்டு கடவுள் ஒருவர் உண்டென நிலை நாட்ட ஆதாரக்காரன் வர்கள் முயன்றார்கள்.

அந்த வேத சாஸ்திரமாதலும், அதற்கு விரோதமானதாலும் பலராலும் இந்த சன்மார்க்க ஞானமானது, பணி செய்யும் அறிவானது, கட்டுப்பட்ட அறிவினது புறம் போய்ருந்து புகுத்தப்பட்டதென்றும், மனச்சாட்சியானது புறம் பொருளை என்றுப் சாதிக்கப்பட்டது. என்று அது உண்டாக்கப்பட வில்லை யென்பதும் அறு மண்ணாரகளால் ஆக்கப்பட்டதல்ல வென்பதும் மாகிய ஆதாரங்களினால் அவர் கள் இயற்கை ஒருவர் உளரென்றும் அவரிடமிருந்தே சகல முல் வந்த தென்றும் கற்பித்துக் கொண்டார்கள்.

மனிதன் அன்னிய பரனையாதவன். குடும்பம், குலம் கோத்திரம் ஆகிய இவைகளுடனே காம் வாழ்வு நடத்து கிறோம். எந்த குடும்பத்தவரோ, கோத்திரத்தாரோ அந் தந்த குலம், குடும்பம், கோத்திரத்தின் பாக்கியத்தைப் பெருக்குகிறார்களோ அவர்களை சான்றோர்களாகக் கருதப் படுகிறார்கள்; அவர்கள் வணங்கப்படுகின்றார்கள்; புகழப்படு

வேலை எங்ஙனம்தென்ன வீருகிறது? ஆனால் இத்தனை கூட்டத்திலிருந்து கொண்டு மற்ற ஜனசமூகங்களைத் தாழ்த்து வதில் மட்டும் இந்து தர்மம் அழியாமலிருக்கின்றதே, அந்த இடத்தைத் தான் அழிக்க வேண்டு மென்கிறோம். அவை யழிந்தால் உருட்டும் புரட்டும் ஓடிப்போய் சுயராஜ்யம் உடனே வந்து விடும்.

கிறார்கள்; மதிக்கப் படுகிறார்கள் அவர்கள் உத்தமமானவர்களாக (நீதியுள்ளவர்களாக) கருதப்படுகிறார்கள்.

எம்மக்கள் குடும்பத்துக்கோ, இனத்துக்கோ, குலத்துக்கோ இன்னலை விளைவிக்கிறார்களோ அவர்கள் பாதகர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் தூற்றப்படுகிறார்கள்; வெறுக்கப்படுகிறார்கள்; அவர்கள் துன்மார்க்கர்களாகக் கருதப்படுகிறார்கள்.

நியாயத்தையும் ஒழுக்கத்தையும் வரையறுப்பது குடும்பம், இனம் அல்லது ஒரு தேசம். இதில் இயல்பிற்கு மேற்பட்டதொன்றுமில்லை. மகதனின் மேதாவியானவர்கள் 'மனச்சாட்சி அன்பிலிருந்து பிறப்பதாகும்' என்று கூறியிருக்கின்றனர். கட்டுப்பட்ட பணி செய்யும் அறிவானது தேவற்கையிலே உண்டானதாகும். அநாகரிகர்களுக்குள் தற்சமயம் நிகழும் காரியங்களை ஆராய்ந்தறியப்பட்டது. மனிதர் முன்னேறுங்கால் நுண்ணியகாரியங்களும் கவனிக்கப்படுகிறது. ஒழுக்கத்தின் நிர்ணயகட்டமானது வரவர அதிகமாகிறது; மனோபாவம் பண்படுத்தப்படுகிறது. மனிதன் பிறருடைய ஸ்தானத்தில் தான் இருந்து கொள்ளுகிறான். பணி செய்யும் அறிவானது அதிக பலம் பொருந்தியதாகவும் கட்டுப்பாடானதுமாகப் போய் விடுகிறது. மனிதன் தன்னைத் தானே நிர்ணயித்துக் கொள்கிறான்.

மனிதன் தேடுகிறான். அன்பே உயர்ந்த சற்குணத்திற்கு ஆரம்பமாகும்; அஸ்திவாரமாகும். அவன் தேடித்த பொருளைத் தன்புதுக்குகிறான். பிறகு துக்கம், சஞ்சலம், பச்சாதாபம், மனச்சாட்சி முதலியவை உண்டாகின்றன. இவைகளிலெல்லாம் இயல்பிற்கு மேம்பட்டதொன்றுமில்லை. மனிதன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான். இயற்கை ஒரு கண்ணாடி போன்றது; அதில் மனிதன் தன்னுடைய சொரூபத்தைப் பார்க்கிறான்; கண்ணாடிக்குள் காணும் உருவம் பிடிக்கப்பட்டது போன்ற கொள்கையையுடைய இயல்பிற்கு மேம்பட்ட மதங்களையும் காண்கிறான்.

எல்லையற்ற பரம்பொருள் உண்டென வைத்துக் கொள்வோம். அப்பரம்பொருளான கடவுளுக்கு நாம் என்ன செய்ய முடியும்? முடிவற்றவராதலால் அவர் நிலைமையற்றவர்; நிலைமையற்றவராதலால் அவருக்கு நன்மையோ தீமையோ செய்ய

முடியாது; அவர் ஒன்றை விரும்ப முடியாது; அவர் ஒன்றை வெறுக்க முடியாது; அவருக்கு எல்லாம் இருக்கிறது.

மதம் பரீட்சிக்கப்பட்டது; ஆனால், எல்லா தேசங்களிலும் எல்லா காலங்களிலும் பிசகியது மதம். அது மனிதர்களை இரக்கமுள்ளவர்களாகச் செய்யவில்லை. விசாரணைச் சங்கத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அடிமைத்தனத்தை மதம் என்ன செய்தது? மதம் எப்பொழுதும் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் விரோதியாயிருந்து வருகிறது; ஒரு பொழுதும் மதம் மனிதர்களை சுயேச்சையுள்ளவர்களாகச் செய்யவில்லை மதம் மனிதர்களை சன்மார்க்கமுள்ளவர்களாக, இச்சை அடக்கமுள்ளவர்களாக, தாளாண்மையுள்ளவர்களாக, யோக்கிய மானவர்களாகச் செய்யவில்லை. மதஸ்தர்களெல்லாம் அநாகரிகர்களை விட குணசீலர்களாக விருக்கிறார்களா? அநாகரிகர்களுக்குள்ளும் அவர்களுடைய கெட்ட பழக்கங்களும் மத பக்தியினின்று வந்ததென்பதை நாம் காணவில்லையா? பிரார்த்தனையால் இயற்கையை நாம் எதேனும் செய்ய முடியுமா? ஆராதனையால் நாம் அலைகளைத் தடுக்க முடியுமா? தேவத்தியங்களினால் நம் காற்றை மாற்ற முடியுமா? முழங்காளிட்டு வணங்குவது நமக்குச் செல்வத்தைத் தருமா? வேண்டுகையால் நம் வியாதியை நீக்கமுடியுமா? சடங்குகளால் நம் நமது அறிவை விருத்தியாக்க முடியுமா? குணத்தையும் யோக்கியதையும் பிச்சை போல வாங்கிக் கொள்ள முடியுமா? மானத உலகத்தில் தோன்றும் உண்மைகள் சட உலகத்தில் தோன்றும் உண்மைகளைப் போல நிலைக்கத்தனைகளாகவும், கட்டாயமானதாகவும் இருக்க வில்லையா? இயற்கைக்கு ஓர் அதிபதி உண்டென்றும், அவர் பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்கிறாரென்றும், அவர் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்கிறாரென்றும், புகழை விரும்புகிறாரென்றும், தெரியவான்களையும் சுயேச்சையானவர்களையும் வெறுக்கிறாரென்றும் ஆகிய இக்கொள்கையாலேயே மதம் ஆக்கப்பட்டிருக்கிறது. எந்த மனிதனாவது விஞ்ஞானத்தினின்று உதவி பெற்றிருக்கின்றானா?

நமது கோட்பாடுகளுக்கு ஏதேனும் உண்மைகளிருக்க வேண்டும்; அவைகளுக்குத் தக்க சான்றுகளிருக்கவேண்டும். போலியானவைகளாலும், மனோபாவத்தாலும், அனுமானத்தாலும் நம்கோட்பாடுகளை உண்டாக்கக்கூடாது. கட்டிடத்துக்கு அஸ்திவாரம் வேண்டும்; கட்ட ஆரம்பித்தால் அடியிலிருந்தே கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

என்னுடைய கோட்பாட்டுக்கு கான்கு படிகளிருக்கின்றன. முதல் படி அழிக்க முடியாத தொருவஸ்து வாயிருக்கிறது இரண்டாம்படி அழிக்க முடியாததொரு சக்தியாயிருக்கிறது. பொருளில்லாயல் சக்தியில்லை; சக்தியில்லாமல் பொருளில்லை. ஆதலின் மூன்றாவது படி சக்தியும் பொருளும் சேர்க்தேயிருக்கிறது. கான்காவதுபடி, அழிக்கமுடியாததொன்றை உண்டாக்கமுடியாது. இக் கொள்கைகளெல்லாம் கோட்பாடுகளாயிருந்தால் அது அவசியமாய் அந்த வஸ்துவையும் சக்தியையும் ஆதி முதல் அந்தம் வரையில் பின் பற்றுகிறது, அவைகளைக் குறைக்கவோ பெருக்கவோ முடியாது. அதுவொன்றையும் சிருஷ்டி செய்ய முடியாதெனச் சொல்லுகிறது. அது கர்த்தா ஒருவர் இருக்க முடியாதென இயம்புகிறது. பொருளுக்கும் சக்திக்கும் புறம்பே ஓரறிவு இருக்கமுடியாதென்கிறது சக்தியில்லாத அறிவு கிடையாது, சக்தியில்லாத பொருள்கிடையாது. ஆதலால் எவ்விதத்திலும் பொருளுக்குப் புறம்பாயுள்ளதொரு அறிவு கிடையாது. ஆதலால் இயற்கைக்கு மேம்பட்டதொன்று கிடையாது இக்கான்கு படிகளும் ஒரு கோட்பாடானதால் இயற்கைக்குப் புலலன் கிடையாது. பொருளும் சக்தியுமே ஆதிமுதல் அந்தம் வரையில் இருக்தால் கடவுள் ஒருவர் இல்லை; லையகத்தைதப் படைத்துக் காக்கும் கடவுளில்லை; தன்பப்பட்டவர்களுக்குத்துணைசெய்யுங் கடவுளில்லை; யுக்தமானவர்களின் துன்பங்களைக் கண்டு மனமிரங்கும் கடவுள் ஒருவர் இல்லை; குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்களையும் அடிக்கப்பட்ட அடிமைகளையும் கவனிக்கும் கடவுள் ஒருவரில்லை; சாவுக்கடி பட்டவர்களைக் காப்பாற்றும் கடவுள் ஒருவரில்லை; தொடர்பிலிருக்கும் பிராணத்தியாகங்களைக் காப்பாற்றிய கடவுள் ஒருவரில்லை; சுருங்கக்கூறின் அது. மனிதன் மேலுலகத்திலிருந்து ஒரு உதவியும் பெறவில்லை யென்று நிரூபிக்கிறது; லகோவதிலுங்களெல்லாம் வீணாயின; பிரார்த்தனையெல்லாம்காற்றில்சென்றுமறைந்தன. கான் அதிகம் தெரிந்தவனென்று சொல்லில்லை மனதில் பட்டதை சொல்லுகிறேன்.

ஆதியந்தமில்லாததிலிருந்து பொருளும் சக்தியும் கன்டாயிற்றென்றால் அது இயன்ற வெல்லாம் கடக்கின்றன. இயன்றவெல்லாம் கடக்கும் என்றுசொல்லுகிறது.

நமது பிரபஞ்சத்தில் தற்செயலுமில்லை. வீண் செயலுமில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் காரணமிருக்கிறது.

முன்னே நடக்காதது பின்னும் நிகழாது, நிகழ்காலம் இறந்த காலத்தின் பயனாகும். நிகழ்காலம் எதிர்காலத்தின் காரண மாகும். ஆதியந்தமில்லாத சங்கிலியில் உடைந்த கரணை யில்லை. சட்சத்திரங்களின் நிலையும் கதியும், உலகத்தின் நிலையும், மரம்செவாழ்வும், மரக்கறி வாழ்வும், உணர்ச்சியும், அறிவும், மனச்சான்றும் விருப்பும், வெறுப்பும், கல்வினையும், தீவினையும், எண்ணங்களும், மனோபாவங்களும், பயமும் நம்பிக்கையும் இந்த உலகத்துக்கு அவசியமாகும். இத்தப் பிர பஞ்சத்திலுள்ள எண்ணிறந்த உண்மைகள் பேதமற்றவைகள்.

நித்தியத்திலிருந்து பொருளும் சக்தியும் உண்டாயிற் றென்றால், மனிதனுக்கு அறிவுடைய கர்த்தர் ஒருவரில்லை யன்றும், மனிதன் உத்தமமான சிருஷ்டியல்லவென்றும் நாம் சொல்லலாம்.

நமது முதல் தாய் தந்தையர் அன்னியர்களல்ல வென்பது நமக்குத் தெரியும். அவர்கள் இவ்வையகத்தில் வாசம் செய் தார்களென்றும், அவர்கள் இவ்விடத்திலேயே பிறந்தார்க ளென்றும், அவர்கள் கடவுளிடமிருந்து வரவில்லை யென்றும் நமக்குத் தெரியும். உலகம் இயற்கையான தென்றும், ஆண், பெண் அனைவரும் இயற்கையாகவே பிறந்தார்க ளென்றும் இப்பொழுது நமக்குத் தெரியும். நமது முன்னோர்களையும் நமது வம்சங்களையும் நாம் அறிவோம். நமக்கு நழைத்தகுடும் பம் இருக்கிறது.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஆண் பெண் அனை வரும் உலகத்தைச் சீர்திருத்த முயன்று வருகின்றனர். அவர் கள் கடவுளையும், பிசாசுகளையும், மோட்சத்தையும் நரகத் தையும் உண்டு பண்ணினார்கள். அவர்கள் வேதபுத்தகங்களை எழுதினார்கள். 'அற்புதங்களை' செய்தார்கள்; அரசர்களை வற்படுத்தினார்கள்; மனிதர்களை அடித்தும், சிறையிலடைத் தும் உயிருடன் கொளுத்தியும் துன்புறுத்தினார்கள்; பயத்தை யும் நயத்தையும் உபயோகப்படுத்தினார்கள்; கெஞ்சிக் கேட் டுப் பார்த்தார்கள், எண்ணிறந்த வழிகளால் மனிதர்களை யோக்கியர்களாகவும் தன்னடக்கமுள்ளவர்களாகவும் குண சீலர்களாகவும் செய்ய முயன்றார்கள்; வைத்தியசாலைகளை யும் பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் கட்டினார் கள்; மனிதரை சீர்திருத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார்கள். இருந்தாலும் அவர்கள் தோல்வியடைந்தார் கள்.

சீர்திருத்தக்காரர்கள் ஏன் தவறினார்கள்? காரணத்தை நான் சொல்லுகிறேன்.

உலகத்தில் அறிவுமயமும் வறுமையும் சோதிமையும் நிறைந்திருக்கின்றன. தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களுக்கு எண்ணிறந்த குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் கடவுளையும், அதிர்ஷ்டத்தையும், தர்மத்தையுமே நம்பி இருக்கிறார்கள். பொறுப்பையாவது சந்தர்ப்பத்தையாவது யோசிப்பதற்குத் தகுந்த அறிவு அவர்களுக்குக்கிடையாது அதனுடன் அவர்கள் குழந்தைகளை விரும்பவில்லை; ஏனெனின் குழந்தைகள் தமக்கும் அவர்களுக்கும் சாபத்தைத் தேடிக் கொள்ளுகின்றன குழந்தை ஒரு பெரிய பாரமாக விருப்பதால் குழந்தையை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வ தில்லை. இத் தகைய வெறுக்கப்பட்ட குழந்தைகளே சிறைச்சாலைகளுக்கும், சிகிச்சை சாலைகளுக்கும், தூக்கு மேடைகளுக்கும் தான் தினமும் செல்லுகின்றன. சிலர் தற்செயலாகக் காப்பாற்றப்படுகிறார்கள். ஆனால் பெரும் பாலோர் கைவிடப்படுகின்றனர். அவர்கள் துஷ்டர்களாகவும், கொடியவர்களாகவும் ஆகிறார்கள். கொள்ளையடித்தும் வஞ்சித்தும் அவர்கள் வாழ்ந்து அத்தகைய கொடூரச் செயல்களை பின்னாளுக்கும் போதிக்கின்றனர்.

பாதகமாகிற வெள்ளத்தின் முன் சீர்திருத்தமாகிற சக்தி பயனற்றதாகி விட்டது. தற்காலத்து குருமார்கள் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அந்தரங்கத்தில் கொடுமைகளைப் பெருக்குகிறது.

கவறுதல் இயற்கையின் அறிகுறியாக வில்லை என்றது. ஏன்? இயற்கைக்கு அறிவு கிடையாது. திட்டங்கிடையாது, இயற்கை காரியமில்லாமல் உடனுடனே ஒரு விதகோக்கமில்லாமல் காப்பாற்றியும் கொஞ்சமும் யோசியாமல் அழித்தும் வருகிறது. மனிதனுக்கு இருக்கும் சொற்ப அறிவையும் அவன் உபயோகப்படுத்த வேண்டும், மனிதவர்க்கத்தைக் காப்பாற்றக் கூடியது அறிவு ஒன்றே. இப்பொழுது எழும் வினாவாவது:—

மூடர்களுக்கும், எளிமையானவர்களுக்கும், பாதகர்களுக்கும், குழந்தைகள் பிறக்காமல் செய்ய கம்மால் முடியுமா? அறியாமையும் பாபங்களும் காகரிகத்தில் கலந்து கொள்ளாமல் செய்ய கம்மால் முடியுமா? இந்த உலகம் எவ்ய

னவு காலம் மூடபக்தியைக் கொண்டிருப்பது? ஒவ்வொரு காரியங்களையும் அனைவரும் ஆலோசிக்கும்படி உலகம் அவ்வளவு நாகரிகமடையுமா? மனிதர்களுக்குத் தன்பத்தையும் பத்தத்தையும் உண்டுபண்ணும் மூழ்நைகளிருக்கின்றன. காரணமென்ன? அவர்களுக்கு அறிவைக்காட்டிலும் அதிக பக்தி இருக்கிறது மனச்சாட்சியைவிட உயர்ந்த பக்தியிருக்கிறது; ஆராய்ச்சியைவிட அதிகமான பக்தி யிருக்கிறது. இந்த மனிதர்களை வெறும் பேச்சுக்களால் சீர்திருத்த முடியாது. இவ்விதமனிதர்களை போதனையால் சீர்திருத்த முடியாது. பக்தி எப்பொழுதும் செவிடாயிருக்கிறது. சீர்திருத்த முறைகள் எப்பொழுதும் பயனற்றதாயிருக்கின்றன குற்றவாளிகளும், கடோடிகளும் நாளுக்கு நான் பெருகிக் கொண்டிருக்கிறார்கள்; சிறைச்சாலைகளிலும், விடுதிகளிலும், சிகிச்சை சாலைகளிலும் கூட்டம் அதிகரிக்கிறது மதம் துணையற்றதாயிருக்கிறது. சட்டம் தண்டிக்க முடியுமே தவிர குற்றங்களைத் தடுக்கவாவது அல்லது குற்றவாளிகளைச் சீர்திருத்தவாவது முடியாது அக்கிரமம் அதிகமாகிறது, அக்கொடுமையுடனும் எதிர்த்துப் போராடினதும் பயனற்றதாயிருக்கிறது ஆனால் ஓர் நம்பிக்கை இருக்கிறது. அறியாமையையும், வறுமையையும், பரபன்தனையும் உலகில் பரவாதவண்ணம் தடுக்க வேண்டும். பிறரை வசப்படுத்தக்கூடிய ஒழுக்கங்களால் அவைகளைத் தடுக்க முடியாது. பேச்சுகளாலும் உதாரணங்களாலும் அவைகளைத்தடுக்க முடியாது. மதத்தாலும், சட்டத்தாலும், குருக்களாலும் அவைகளைத் தடுக்க முடியாது. நிரோகசக்தியாலாவது அல்லது மனோசக்தியாலாவது இதைத் தடுக்க முடியாது. இதைத் தடுப்பதற்கு ஒரே ஒரு வழி தானிருக்கிறது. பெண்களெல்லாம் கல்வி சொரூபமாக வேண்டும். கல்வி ஒன்றே சன சமூகத்தைக் காப்பாற்றக் கூடியது, இதுவே நமது கேள்விக்குச் சரியான பதில். இதுவே பெண்களை அடிமையினின்றும் விடுவிக்கிறது. அப்பொழுது பிறக்கும் குழந்தைகளெல்லாம் வரவேற்கப்படும். அவைகள் அன்புடன் நேசிக்கப்படும். அவைகள் பெற்றோர்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்.

சுயேச்சையானவர்களை விட அடிமைகளே உண்மையானவர்களென்றும், அச்சமே அறிவைக் காட்டிலும் சிறந்ததென்றும், கட்டளைக்குக் கீழ்படிபவர்களே நல்லவர்களென்றும், அறியாமையிலிருந்தே நற்குணங்களெல்லாம் உண்டா

கின்றனவென்றும் கம்புகிற ஆண், பெண் அனைவரும் ஓடி ஒளிந்து கொள்ளுவார்கள்.

ஆராய்ச்சி கல்லொழுக்கத்துக்கு விரோதமென்றும், அறியாமையில் தான் பரிசுத்தமிருக்கிறதென்றும், தன்னையே அறிந்து கொள்ளுவது ஆபத்தென்றும் எண்ணுகிறவர்களெல்லாம் அறிவே பக்தியைவிட சிறந்ததென்று சொல்லிய மாத்திரத்தில் திகிலடைந்து விடுவார்கள்.

ஆனால் எக்காலத்தில் ஆண் பெண் அனைவரும் மன ஆராய்ச்சியாலும் அறிவில் சிறந்த கல்லொழுக்கத்தாலும் தன் பங்களுக்கு ஆளாகாமலிருக்கிறார்களோ — தவறுதலடையாமலிருக்கிறார்களோ — அப்பேர்ப்பட்டதோர் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன்.

அந்தக்காலம் வரும் பொழுது சிறைச்சாலைகளெல்லாம் இல்லாதொழியும்; தூக்கு மேடைகளெல்லாம் அழிந்து போகும்; வறுமையும் குற்றமும் பறந்தோடிப்போகும்; பிச்சைக்காரர்களெல்லாம் இருக்கமாட்டார்கள்; உலகம் முழுவதுமே அறிவாளியாகவும், யோக்கியமாகவும், சுயேச்சையாகவுமிருக்கும். மதமே அடிமையாயிருக்கும் பொழுது அதனிதர்களை எவ்விதம் சிக்கிருத்த முடியும். "பயமென்னும் பேயை ஒழித்து" சுயேச்சையரசம் ஆண்மையுடன் திகழ்கின்று எதிர்காலத்தை இப்பழுடன் வரவேற்பது மேலானது. அப்பொழுது,

பாதுகாபாய் இருக்கலாம்! அப்பொழுது மனோராஜ்யம் செய்யலாம்; மனக்கோட்டை கட்டலாம்; காரணகாரியங்களை மறந்திருக்கலாம்; அறிவின் வழியே சென்று பொழுது போக்கலாம்! கடவுள்களையும் அவரது கட்டளைகளையும் மறந்து விடலாம்! பயமில்லாமல் இருக்கலாம்! இவைகளெல்லாம் மேலானவை.

பிறகு நீ, எல்லா காரியங்களையும் செய்ய ஆரம்பிப்பாய்; உனது எண்ணப்படி நடப்பாய்! உலகத்தின் கண்ணுள்ள உண்மையைத் தேடுவாய்! அறிவை விருத்தி செய்வாய்! ஏழைகளைக் காப்பாற்றுவாய்! உண்மையைக் காப்பாற்றுவாய்.

இதுவே உண்மை மதம். இதுவே நியாயமான ஆராதனையாகும்.

பயம் குரு பீடத்தை எழுப்பி வைவேத்தியத்தைப் படைக்கிறது. பயம் முழுத்தாளிட்டு பிராத்தனையை ஓதுகிறது. பயம் தெரிக்க பாசாங்கு செய்கிறது. மதம், அடிமைத்தனத்தின் தொடக்கம், மனத்தாழ்மை, வெறுத்தல், மனனிப்பு, இணக்கம் முதலியவற்றையே போதிக்கிறது. உதடுகள் பயபக்தியுடன் "அவன் என்னைக்கொன்றாலும் நான் அவனை நம்புவேன்" என்று செப்புகின்றன. இதுவே ஈனமான பாதாளம். மதம், சுயதத்தியம், சுயேச்சை, ஆண்மை, தைர்யம், தற்காப்பு முதலியவற்றைக் கற்பிப்பதில்லை. மதம் கடவுளை அதிபதியாகவும், மனிதர்களை அடிமைகளாகவும் அமைக்கிறது. அதிகாரி அடிமைத் தன்மையை இன்பமானதாகச் செய்யப்பட்டிருக்கிறது அவ்வளவு மகாமேன்மையானவராக விருக்கிறது.

கடவுள் ஒருவர் இருந்தால் அவர் எல்லவர் என்பது நமக்கு எப்படித் தெரியும்? அவர் இரக்க முள்ளவரென்றும், மானிடர்களுக்காக கவலை கொள்கிறாரென்றும் நாம் எவ்வாறு நம்பிக்க முடியும்? கடவுள் ஒருவர் இருந்தால் அவர் அனேக கடலைகளில் கோடிக்கணக்கான ஏழை மைத்தர் நிலத்தை உழுது விதைத்து பயிரிடுவதைக்கண்டிருக்கிறார். அவர்களைப் பார்த்த பொழுது மனிதர்கள் உயிருடனிருக்க அந்தப் பயிரை யாரோ கபளியிருந்தாக்களென்று அவருக்குத் தெரியும். என்றாலும் இரக்கம் பொருந்திய கடவுள் மழையைக் கொடாமல் வைத்துக்கொண்டார். அவர் கதிரவனை உதயமாகச் செய்து நிலத்திலுள்ள ஈரத்தை நிழுக்கச் செய்தாரே ஒழிய மழையைத் தரவில்லை. மந்தை கட்ட பயிர் வாடி அழிவதைப்பார்த்தார். ஆனால் மழையைத் தர வில்லை. மனிதர்கள் வறண்ட பூமியை வருத்தத்துடன் நோக்குவதைக் கண்டும் மழையைத் தரவில்லை. வானை, சுருங்கிய கொஞ்சம் ஆகாரத்தையும் அவர்கள் சாப்பிடுவதை அவர் கண்ணுற்றார். பட்டினி கிடக்கும் கொள்களில் அவர்கள் அழிந்து போவதைக்கண்டார். அவர்களுடைய பதிலைப் பார்த்தார், உள் குவிந்த கண்களைக் கண்டார், அவர்களுடைய பிராத்தனையைக் கேட்டார்; எளிமையான பிரலோகனையும் அவர்கள் தின்பதைக் கண்டார். மதம பிதாக்கள் பரிசுத்தர்கள் பித்தர்கள் போலிருப்பதைக் கண்டார், குருமிகளைக் கொண்டு தின்பதைக்கண்டார்; இருதாலும் மேலே பரமண்டலத்திலிருக்கும் பிதா கல்லைப் போலிருந்தார். கீழுள்ள பூமியும் இரும்பைப் போலிருந்தது. அவர் மழையைத் தரவில்லை. இக்கடவுளின் இருதயத்தில்

அன்பிருக்குமென்று காம் சொல்ல முடியுமா? அவர் மண் ணோர்களுக்காக கவலை கொண்டாரென்று காம் சொல்ல முடி யுமா? அவருடைய காருண்யம் என்றும் நிலைத்திருக்கு மென்று காம் இயம்ப முடியுமா? பிணங்களை வயல்களில் பரப் பியும் கிராமங்களை அழிக்கும்படியான புயல் காற்றை அனுப் பியதாலும் கடவுள் கல்லவரென காம் ரூபிக்கிறோமா? ஆயி ரக்கணக்கான திக்கற்ற குழந்தைகளைக் கொல்லும் படியான பெரிய வெடிப்புகளை உண்டு பண்ணியும், அல்லது எரிமலை யிலிருந்து வரும் கெருப்பு ஆறுகளால் மனிதர்களைப் புதைத் தும் இருப்பதைக் கொண்டு அவர்கல்லவரென்று காம் ரூபிக்கி றோமா? மைக்குத் தெரிந்த உண்மைகளிலிருந்து கடவுளின் சுசீலத்தை காம் அனுமானிக்க முடியுமா? இவ்வித இடர்கண் கள் கேராவிட்டால்—கடவுள் மனிதர்களுக்காகவலைகொள்ள வில்லை யென்று சந்தேகம் கொள்ளுவோமா? பஞ்சம், கொள்ளை, நோய், புயல், காற்று, பூகம்பம் முதலியவைகளி ல்லா விட்டால் கடவுள் கல்லவரல்ல வென்று காம் சந்தேகிப் போமா?

வேதசாஸ்திரிகளின் கொள்கைப்படி கடவுள் மனிதர் களை சம நிலையில் படைக்கவில்லை. அறிவிலும் உருவத் திலும், நிறத்திலும் மாறுபட்ட வம்சங்களை கடவுள் உண்டு பண்ணினார். இதில் யோக்கியமாவது விவேகமாவது இருக் கிறதா? உயர்ந்த குலத்தார் தாங்கள் தாழ்ந்த குலத்தாரில்லை யென்றா கடவுளுக்கு வந்தனம் செலுத்த வேண்டும்? இதை சரியென்று ஒப்புக் கொண்டால் நான் மற்றொரு கேள்வி கேட்கிறேன். தாழ்ந்த வகுப்பார் தாங்கள் உயர்ந்த வகுப் பார்களாக இல்லை யென்றா அல்லது தாங்கள் மிருகங்க ளில்லை யென்றா கடவுளை வணங்க வேண் டும்? கடவுள் பலதிறப்பட்ட வகுப்பார்களை அடிமைப் படுத்துவார்களென்றும் அவருக்குத் தெரியும். கடவுள் இத் தனை செய்தும், இரத்தம் சிந்தப்படு மென்றும், தீவிர வேதனை என்றும் நிலைபெற்று கிற்கு மென்று தெரிந் தும், எண்ணிறந்த வயல்களில் கொல்லப்பட்டவர்களின் பிரேதங்கள் இடப்பதையும், இரத்தம் கசியும் அடிமைக ளுடைய முதுகையும், குழந்தைகளின் பிரிவால் தாயார் களின் உள்ளுடைந்த மனதையும் அவர் பார்த்திருப்பா ரானால் அவரை விடப் பொறாமையுள்ள பிசாசு ஒன்றை காம் கருத முடியுமா? பிறகு எதற்காக கடவுள் கல்லவரென்று காம் சொல்ல வேண்டும்?

சிறைச்சாலைகளில் இறந்த தைர்யவான்களும், தர்ம குணமுள்ளவர்களும், தூக்கு மேடைகளில் தங்களது மேன்மையான இரத்தத்தைச் சிந்தி வாழ்ந்தவர்களும் கஷ்டப்பட்டு புகழ் கொண்ட பிராணத் தியாகிகளும், வேதனா யந்திரத்தில் கொடுக்கப்பட்டு பூட்டுகளும் தண்டனைகளும் பிய்க்கப்பட்ட குணசீலர்களும், உண்மையை காப்பதில் கண்கள் அழிக்கப் பட்டவர்களும், சண்டையிட்டு வீணே இறந்த எண்ணற்ற தேசாபிமானிகளும், தன் புருஷனினால் கண் கலங்கிய பெண்மணிகளும், பரிதாபமான அனாதைக் குழந்தைகளும், கடந்த ஆண்டுகளில் கொல்லப்பட்ட கோடிக் கணக்கானவர்களும், வெள்ளத்திற்கும், வெங்கனலுக்கும் ஆளானவர்களும், புயல் காற்றிற்கும் அலைகளுக்கும் ஆளானவர்களும் இடிக்கும் எரிமலையினுடைய கொந்தளிப்புக் குழம்புக்கும், பஞ்சத்துக்கும் தொத்து வியாதிகளுக்கும், தன்பத்திற்கும், துஷ்டமிருகங்களுக்கும், விஷமுள்ள பாம்புகளுக்கும், இரையானவர்களும், வெற்றிமாலை சூடிய ஈனர்களும், முடி தரித்த கொடுரமானவர்களும், பட்டாடைஉடுத்த வஞ்சர்களும் உலகத்தினுள்ள சுதந்தரம் பிடுங்கப்பட்ட தென்று வருந்தி வணங்கினார்கள். இவ்வுண்மைகளெல்லாம் மனிதர்களைக் காத்து ஆசீர்வதிக்கும்படியான தொரு கடவுள் இல்லையென இயம்புகிறது.

நீதிக்காகப்பணி செய்யும் சக்தி

பெரும்பாலான மக்கள், இயல்பிற்கு மேற்பட்ட கொள்கையைத் தழுவுகிறார்கள். ஒரு கடவுள் இல்லை யென்றால் அவர்கள் மற்றொரு கடவுளைக் கற்பித்துக் கொள்ளுகிறார்கள். கடவுள் இல்லை யென்றால் நீதிக்காக உழைக்கும் சக்தியைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள். இந்த சக்தி என்பது எது? அப்பியாசத்தால் மனிதன் உயர்கிறான், உயர்ந்தே திருகிறான்.

ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டியதொரு மனிதன் சாலைகள் பிரியுமிடத்திற்கு வந்து சேருகிறான். வலப்பக்கத்துப் பாதை என்று எண்ணிக்கொண்டு அவன் இடப்பக்கத்துப்பாதை வழியே சென்று முடிவில் வழி தப்பி வந்ததை உணர்கிறான். பிறகு அவன் திரும்பி வந்து சரியான பாதை வழியே சென்று குறிப்பிட்ட இடத்தைச் சேருகிறான். மறு

கற்பொழுக்கம்.

தமது முன்னோர்கள் வாழ்ந்ததைவிடச் சிறப்பாக வாழக் கற்றுக் கொள்வதே தாம் தமது முன்னோர்களுக்குச் செய்யக் கூடிய மரியாதை என ஒரு பெரியார் கூறியிருக்கிறார். சமூக முன்னேற்றத்தைப் பற்றிய கருத்துக்கள் பலதிறப்பட்டனவாயிருக்கின்றன. முன்னோர்கள் முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. மேனாட்டானைப் போலவே கிழ்நாட்டாரும் முன்னேற்ற விஷயத்தில் அலட்சியமாகவே இருந்து வந்தனர். உண்பது உடுப்பது போன்ற புறத் தேவைகளிலே அவர்கள் அதிக கவனம் செலுத்தி வந்தனர். சீர்திருத்த உணர்ச்சியும் முன்னேற்ற உணர்ச்சியும் மிகச் சமீப காலத்திலே தோன்றின.

இப்பொழுதும் மிக்க ஆர்வமுடைய சீர்திருத்தவாதிகளும் கூட சில குறிப்பிட்ட துறைகளிலே சீர்திருத்தம் செய்ய

தடையையும் அவன் வலது புறமுள்ள பாதையை விடுத்து சரியான பாதையிலேயே செல்கிறான். அவன் அப்பாதையிற் சென்றிருப்பதால் வேறு பாதை என்பதை தெளிந்து கொண்டான். அவன் சரியான பாதை வழியே செல்கிறான். இவ்விடத்தில் வேத சான்றோர்கள் "நீதி வழியே செலுத்தும் சக்தி ஒன்று இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

சுவாலையின் அழகில் வசீகரப்பட்ட ஒரு குழந்தை அந்தச்சுவாலையை இளங்கைகளால் பிடிக்கிறது. கொப்பு சுட்டு விட்டது. அதன் பிறகு குழந்தை தனது கையை கொப்பினிடம் கொண்டு போவதில்லை. நீதி வழியே செல்லும் சக்தி குழந்தைக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டது.

ஒன்று சேர்ந்த உலக அனுபவமே நீதி வழியே செல்லும் சக்தி. அந்த வல்லமையான சக்திக்கு உணர்ச்சி கிடையாது; அதற்கு சித்தம் கிடையாது; தணிவு கிடையாது; அது ஒன்றின் பலனாகும்.

விரும்புகின்றனர். சர்வ வியாபகமான சீர்திருத்தங்களை விரும்புவோர் மிகச்சிலரே.

உலகமுழுவதும் பொதுவாக இருந்து வரும் சமூக லட்சியம் என்னவெனில் தமது முன்னோர்களைப்போல வாழ்க்கை கடத்துவதே.

ஆனால் சமூக ஸ்தாபனங்கள் எல்லாம் குறைபாடுடையனவாகவே இருக்கின்றன. சீர்திருத்தம் தேவையில்லாத ஸ்தாபனங்களே இவ்வுலகத்தில் இல்லையென்று ஒப்புக்கொள்வதே உயர்வான லட்சியம். ஒழுக்கம் மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதை இப்பொழுது அநேகமாக எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். பழமை விரும்பிகள் எப்பொழுதும் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகிறார்கள். கற்பு அல்லது ஆண் பெண் ஒழுக்க விஷயமாகத் தற்காலம் இருந்து வரும் ஏற்பாடுகளே சரியானவை என்றும், அவைகளை மாற்றினால் சமூகமே அழிந்து விடுமென்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

எனவே, தற்காலம் அமலில் இருந்து வரும் ஆண் பெண் ஒழுக்க சம்பந்தமான ஏற்பாடுகளைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

பலதிறப்பட்ட ஒழுக்கங்கள்.

ஆனால் கற்புணர்ச்சி உலகமுழுவதும் ஒரே சீராக இருக்க வில்லை. ஒரு தேசத்தில் கல்லொழுக்கமென மதிக்கப்படுவது வேறொரு தேசத்து கூடாவொழுக்கமாக எண்ணப்படுகிறது. எனவே முக்கியமான சிலவற்றைப் பற்றி மட்டும் இந்த ஒரு சிறிது ஆராய்வோம். பொதுவாக பெண் புருஷனின் அடிமை என்றும், போகப்பொருள் என்றும், அவளைப் புருஷன் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றும் உலக மக்கள் எல்லாம், ஒரு காலத்தை நம்பியே வந்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவிலே பெண்கள் அடிமைகளிலும் கடையதாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். புருஷர்கள் பெண்களை மிகக் கொடுமையாக நடத்தினார்கள்; மிருகத்தனமாக ஹிம்சித்தார்கள். பெண்கள் சுந்தரிகளாக இருந்து விட்டாலோ அவர்கள் பாடு அதோ கதி தான்.

ஆபிரிக்கப் டெண்கள் நிலைமையும் மிக்க பயங்கரமாகவே இருந்து வந்திருக்கின்றது. பெண் புருஷன் சொத்தாகவே இருந்து வந்திருக்கிறாள். தன்னிஷ்டப்படி அவளை உபயோகித்துக் கொள்ள புருஷனுக்குப் பூரண சுதந்தரம் இருந்து வந்திருக்கிறது.

ஹியாலயப் பிரதேசத்திலுள்ள ஒரு ஜாதியார் திபெத்தியர் வழக்கத்தைப் பின் பற்றி வருகிறார்கள். பண்டங்களை விற்பது போல் அவர்கள் பெண்களை விற்பனை செய்து வருகிறார்கள். ஒரு பெண்ணுக்கு வேக காலத்துப் பல புருஷர்கள் கணவன்மாராயிருந்து வருகிறார்கள். தகப்பன் புத்திரிகளை தாராளமாக விற்கிறான். அம்மட்டோ அவர்கள், தங்கள் மனைவிகளை யாருக்கு வேண்டுமானாலும் வாடகைக்கும் விடுகிறார்கள்.

நியூஜீலந்து வழக்கம் கொடியதாயிருப்பதுடன் விநோதமாகவும் இருக்கிறது. தந்தை தன் மகனையும், சகோதரன் தன் சகோதரியையும் வேறொருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கும் போது "அவள் உனக்கு திருப்தியளிக்க வில்லையானால் அவளை நீ விற்றுவிடு, அல்லது கொன்று விடு, அல்லது தின்று விடு, நீயே அவளுக்கு எஜமான், அவளை உன் இஷ்டப்படி என்னவேண்டுமானாலும் செய்யலாம்." என்று கூறுவார்களாம்.

காட்டாள ஜாதியார் பழக்க வழக்கங்கள் இவ்வாறாக, நாகரிக மக்கள் நிலைமை எவ்வாறு இருந்திருக்கிறதெனப் பார்ப்போம்.

ரோமாபுரியில் ஆதி காலத்திலே பெண் கணவன் சுமார் பத்தின் பொதுச்சொத்தாக, பொது அடிமையாக மதிக்கப் பட்டுவந்தாள். காட்டோ என்ற நல்லெழுக்கமுடைய பெரியார் தன் மனைவி மரோஷியாவைத் தன் கண்பன் ஹார்ட்டென்சியக்கு இரவலாகக் கொடுத்து அவன் இறந்த பின்பு அவளைத்திரும்பப் பெற்றுக்கொண்டாராம். ரோமர் கலியாண முறை ஒரு அடிமை ஒப்பந்தமாகவே இருந்து வந்தது. பெண் தன் ஆயுட்காலம் முழுதும் கணவனுக்கு அடிமையாகவே மதிக்கப் பட்டு வந்தாள்.

ஆங்கிலப்பெண்கள் நிலைமையும் ஆதியில் மிக மோசமாகவே இருந்து வந்தது. புருஷன் தன் மனைவியை மனம்

கொண்ட மட்டும் அடிக்கலாம்; ஆனால் பெருவிரலைவிடப் பருமனான தடியால் அடிக்கக்கூடாது. இத்தப் புராதன கொடிய வழக்கம் சில இடங்களில் இப்பொழுதும் வெகு அபூர்வமாக இருந்தே வருகிறது. பெண்களின் துயாத்தைக் குறைக்கும் சட்டங்கள் தோன்றிய போதெல்லாம்பழமைவிரும்பிகள் மிக வண்மையாக எதிர்த்தே வந்தனர். அத்தகைய எதிர்ப்பு எந்நாளும் மிக வன்மையாக இருந்து வந்ததாயினும் காலஞ் செல்லச் செல்ல மாற்றங்கள் ஏற்பட்டே வந்தன.

தகப்பன் மகளைத் தீண்டுவதும் சகோதரன் சகோதரியைத் தொடுவதும் பயங்கர அசாசாரமான பாபச் செயலாக இப்பொழுது மதிக்கப்பட்டு வருகிறது.

ஆசார் கி. மு. 66ல் அராபியாவிலே சகோதரர் சகோதரிகளையும், புத்திரர் தாய்மாரையும் பெண்டாண்டு வந்ததாகஸ்ட்ராபோ என்பார் கூறுகிறார் வமிச விருத்திக்காக முறைகேடான புணர்ச்சி உலக முழுதும் அனுமதிக்கப்பட்டே வந்திருக்கிறது.

பிரம்மா தன் புத்திரியான சரஸ்வதியைமணஞ்செய்துகொண்டானாம். எகிப்திய தேவனான ஆம்மன் தன் தாயை மணவியக்கிக்கொண்டானாம். ஓடின் என்ற தேவன் தன் புத்திரி பிரிக்காவை மனைவியாக்கிக்கொண்டானாம். ஜூபிட்டர் தன் சகோதரி ஜூனோவை விவாகம்செய்துகொண்டான். இந்தியா விலும் சில ஜாதியாருக்குள் சகோதரர் சகோதரிகளை மணந்து கொள்ளும் வழக்கம் இப்பொழுதும் இருந்தே வருகிறது.

ஒரு காலத்திலே ஆணும் பெண்ணும் தம் இஷ்டப்படி கண்டபடி புணர்ந்தே வந்தார்கள். "ஒரு புருஷன் ஒரு பெண்ணைக்கலியாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அவளைச் சேர வல்லாப் புருஷர்களுக்கும் உரிமையுண்டு" என ஹாடாட்டஸ் குறிப்பிட்டிருக்கிறார். லீசியர், எட்ரூஸ்காளர், சிரீட்டர் அத்தீனியர், வெஸ்பெயின்கள், எகிப்தியர் முதலியவருக்குள் பண்டி ஆண்களும் பெண்களும் தத்தம் இஷ்டப்படி வரையறையின்றிப் புணரும் வழக்கம் இருந்து வந்தது எனபாச்சோபின் என்பார் தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டியிருக்கிறார். பெண்கள் பருவ மடைந்த பிறகு எதேனும் ஒரு ஆலயத்துக்குச் சென்று எதேனும் ஒரு இளைஞனைத் தேடிப்பிடித்துக் கூடி கன்னிகழித்துக்கொள்ள வேண்டியது பாபிலோன் தேசத்

திலே ஒரு புனிதமான மதச்சடங்காக மதிக்கப்பட்டு வந்தது. மெம்பிஸ், அர்மீனியா, டயர், சிடோன் முதலியபிரதேசங்களி லும் இந்த அனாச்சாரம் இருந்து வந்திருக்கிறது. லிபியன் கன்னிப்பெண்கள் தனக்கு இஷ்டமானவரைக் கூடி சீதனத் துக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதித்தார்கள். விவாகத் துக்கு முன் அவர்களுக்கு புனர்ச்சி சுதந்தரம் இருந்து வந் தது. எனவே பல பேரைக் கூடி அதிக பணம் சம்பாதித்த வளையே எல்லோரும் மணக்க விரும்பினர். காரசிய ஜாதி யாருக்குள்ளும் இவ்வழக்கு இருந்து வந்ததாகஹெரடோட்டஸ் கூறுகிறார். எகிப்திய ராஜகுமாரி ஒருத்தி விபசாரம் செய்து பணம் சம்பாதித்துத் தனக்கென ஒரு கோபுரம் (Pyramid) கட்டிக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

மார்குஸாஸ், பிலிப்பைன, பொலினீ ஷியத்தீவுகளி லுள்ள சில பிரதேசங்களிலும் ஆபிரிக்காவில் சிலஜாதியாருக் குள்ளும் பெண்களுக்கு இப்பொழுதும் புனர்ச்சிச் சுதந்தரம் இருந்தே வருகிறது. கலியாண தினத்தன்று பெண்ணின் பந் துக்களான புருஷர்கள் எல்லாம் அப்பெண்ணைக் கூடும் வழக்கம் பாலியனிக் தீவுகளில் மிகச் சமீப காலம் வரை இரு ந்து வந்தது. சில ஜாதியார், எல்லாப் புருஷர்களுக்கும் ஒரு பெண்ணைச் சேர உரிமையுண்டென்பதற்கு அறிகுறியாக எல்லாருக்கும் பொதுவான ஜாதித்தலைவனோ குலகுருவோ அப்பெண்ணைக் கூட அனுமதிக்கிறார்கள். மலையாளத்திலே ஒரு ஜாதியார் தம் மனைவிமாரின் கன்னி கழிக்க மத குரு மாரை ஏற்படுத்துகிறார்கள். இந்தியாவின் அநேக பிரதேசங் களிலும் பெரிபிக் மகா சமுத்திரத்திலுள்ள சில தீவுகளி லும் இவ்வழக்கம் இப்பொழுதும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. சனிகாப்பியாவிலே ஜாதித் தலைவனே யுத்தப் புண்ணிய கருமத்தை நடத்தி வருகிறான். சில பிரதேசங்க ளிலே கன்னிகழிக்க விசுகிரகங்களை உபயோகப்படுத்துகிறார் கள். இவ்வழக்கங்களைப் பின் பற்றியே, ஐரோப்பாவிலும் மத்திய காலம் வரை முதலில் புணரும் உரிமை குறிப்பிட்ட சிலருக்கு இருந்து வந்தது.

ஆண், பெண் ஒழுக்க வழக்காடுகளை காம் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால அவைகளவும் எதேனும் ஒரு முறை யில் ஒரு மதக் கொள்கையைத் தழுவி நிற்பதைக் காணலாம். எனவே ஆண் பெண் ஒழுக்கக் கொள்கைகளையும் ஆசாரங் களையும் காம் பரிசீலனை செய்யும்போது அந்த விஷயம்

மிகவும் சிக்கலான தென்பதையும் விசாலமான தென்பதையும் காம் முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; கம்முடைய ஒழுக்க முறையே மேலானதென்று கண்ணை மூடிக்கொண்டு முடிவு கட்டி விடலாகாது. மற்றக்கால ஆசாரங்களை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் தான் காம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய முறை புலனாகும்.

பழைய ஏற்பாட்டு ஒழுக்கங்கள்.

தற்காலக் கிறிஸ்தவ கற்பொழுக்கத் திட்டங்களுக்கு புதிய ஏற்பாட்டைத் தழுவிய பழைய ஏற்பாட்டு ஒழுக்க முறைகளும் அவைகளின் பாஷ்யங்களுமே ஆதாரமாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதை பழைய ஏற்பாடு ஆகரிக்கிறது. "புருஷன தனிமையாக இருப்பது நல்ல தல்ல நான் அவனுக்கு ஒரு வாழ்க்கைத்துணையை உண்டு பண்ணுவேன்" என்று சொல்லி ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்து கடவுள் சேர்த்ததாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. மற்றும் ஆணையும் பெண்ணையும் கடவுள் ஆசீர்வதித்து "நீங்கள் பெற்றுப் பெருகி உலகத்தை நிரப்புங்கள்" என்று கட்டளையிட்டாராம். கிறிஸ்தவ ஒழுக்கங்களை வகுத்த ஆதிக் கிறிஸ்வ ஞானிகள் பிரம்மச்சரியத்தைப் பாராட்டிப் பேசியிருந்தாலும் கிறிஸ்து மதத்துக்கு ஆதாரமான ஹிப்ரு மதம் பிரம்மச்சரியத்தை ஆகரிக்கவில்லை. ஒருபுருஷன் பல பெண்களை மணைவியாகக் கொள்வதை பழைய ஏற்பாடு ஆகரிக்கிறது. ஆதாமின் ஏழாம் தலைமுறையானான லாமெக்கு இரண்டு பெண்களை மணத்திருக்கிறான். தலைமைப் பூசாரி ஒரே பெண்ணைத்தான் மணக்க வேண்டுமென்று பழைய ஏற்பாடு வற்புறுத்தியிருக்கிறது. அரசன் பல பெண்களை மணக்தல் கூடாதென்றும் கட்டளையிட்டிருக்கிறது. எனினும் பல அரசர்கள் அதை மதிக்கவில்லை. தாவீது அரசன் பல பெண்களை மணந்தான். சாலோமன் அரசனுக்கு 700 மனைவிமாரும் 300 வைப்பாட்டிகளும் இருந்தார்கள். ஆபிரகாம் தன் சிற்றப்பன் மகளை கலியாணம் செய்து கொண்டான். ஒருவன் இறந்தால் அவனது விதவையை அவன் தம்பி கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்று லெவியட் சட்டம் வற்புறுத்துகிறது. ஆபிரகாம தன மனைவியின் வேலைக்காரியைக் கூடிப் பிள்ளை பெற்றான். ஜேக்கப் இரண்டு சகோதரிகளை மணந்து கொண்டதுடன அவர்களுடைய வேலைக்காரிகளையும் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டான்

பெண்கள் நிலைமை.

ஹிப்ரு சட்டப்படி மனைவி கணவனுக்கு அடிமையாகவே இருந்தாள். கணவன் மனைவியை ஹிம்சித்தால் சட்டப்படி அவளுக்குப் பரிகாரமில்லை. கணவனுக்கு மட்டும் விவாக விடுதலை உரிமையளிக்கப் பட்டிருந்தது. புருஷனுக்குப்பிடிக் காத பெண்ணை அவன் வீட்டை விட்டு விரட்டலாம். அவள் அப்பால் விருப்பமுள்ளவனைக கூடி வாழலாம். கணவன் மனைவியை நீக்கும்போது தன் கைப்பட ஒரு அறிக்கை எழுதிவெனியிட வேண்டும்.

தகப்பனுக்குத் தன் குழந்தைகள் மீது பூரண அதிகாரம் இருந்து வந்தது. குழந்தைகளைக் கொல்லவும் கூட அவனுக்கு உரிமை இருந்தது. புத்திரிகள் மீதும் பூரண சுதந்தரம் இருந்து வந்தது. அவன் புத்திரிகளை விற்பனை செய்யலாம். விபசாரம் செய்யக்கூடாதென்று பத்துக்கற்பனையில் ஒரு விதி இருக்கிறது. மனைவி கணவன் சொத்தாகையினால் அவளைப் பிறர் உபயோகப்படுத்தக்கூடாதென்பதே அத் தடையின் கருத்து. ஒரு மனிதன் தன் அயலான் மனைவியோடாவது பிறன் மனைவியோடாவது விபசாரம் செய்தால் விபசாரம் செய்த ஆணுக்கும், பெண்ணுக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு கன்னிப்பெண் வேறொரு பெண்ணின் கணவனோடு சேர்ந்தால் அவளுக்கு தண்டனை வழங்குவதைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை விபசாரம் ஒரு குற்றமென பழைய ஏற்பாடு விதித்திருந்தாலும் அக்காலத்து விபசாரம் தாராளமாக நடைபெற்றே வந்திருக்கிறது.

ஸாட் என்பான் மீட்டுக்கு இரண்டு விருந்தாளிகள் வந்தனர். அவர்களை வரவேற்று அவன் உபசாரம் செய்தான். ஆனால் அவ்விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டுமென்று ஊரார் கேட்டுக் கொண்டார்கள். எனினும் லாட் இணங்கவில்லை. அதிதிகளை விரட்டுவது மகா பாபமென எண்ணினான். எனவே அதிதிகளை ஊரார் தொந்தரவு செய்யாதிருந்தால் தன் இரண்டு புத்திரிகளையும் ஊராருக்கு வழங்கி விடுவதாக லாட் கூறினான். தன் புத்திரிகளின் கற்பை விட அதிதி சத்காரமே அவனுக்குப் பெரிதாகத் தோன்றிற்று, இதனால் அக்காலத்துப் பெண்களின் நிலைமை எவ்வளவு இழிவாக இருந்ததென்று விளங்கவில்லையா?

புதிய ஏற்பாட்டு ஒழுக்க முறைகள்.

கிறிஸ்துவின் உபதேசங்களைக் கேட்டால் நாம் கனவுலகத்தில் இருப்பது போலவே தோன்றும். "ஒரு பெண்ணை காமக் கண்ணால் நோக்குபவன் மனத்தினால் விபசாரம் செய்கிறான்" என்று கிறிஸ்து கூறுகிறார். ஆனால் இது அறுபவசாத்தியமான உபதேசமல்ல. மனத்தினால் விபசாரம செய்கிறவர்களுக்கெல்லாம் சர்க்கார் தண்டனையளித்தால் உலக மக்கள் எல்லாம் சிறையில் அடைபடவேண்டியதுதான். விவாக விடுதலையைப் பற்றிய கிறிஸ்துவின் உபதேசம் மிகவும் கண்டிப்பானது தான். "விபசார தோஷத்துக்கு ஆளாகாத பெண்களை விவாக விடுதலை செய்பவன் அவள் விபசாரம் செய்யும்படி நேர்ந்திறான். விவாக விடுதலைபெற்ற பெண்களை விவாகம் செய்கிறவனும் விபசாரம் செய்கிறவனாகிறான்" எனக்கிறிஸ்து கூறுகிறார். இது உயர்வான எட்சியந்தான். ஆனால் அக்கால மக்களுக்கு அது பொருத்தமானதல்ல. இன்றும் ஆண்களும் பெண்களும் அதைப் பின்பற்ற முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். மணவினைகள் சுவர்க்கத்தில் நடைபெற்றால் அவைகளை மதித்து செய்ய மனித நீதிஸ்தலங்களுக்கு நேரிகால் அதிகாரமில்லாதிருக்கலாம். ஆனால் மண்ணுலகத்தில் நடைபெறும் கலியாணங்களை மதித்துசெய்ய மனித நீதிஸ்தலங்களுக்கு அதிகாரமிருந்துதான் ஆகவேண்டும்.

மேலும் கிறிஸ்துவின் போதனை பழைய ஏற்பாடு முதல் ஆகமத்துக்கு முரணானதாகவே இருக்கிறது. இவ்வுறுத்தை கிறிஸ்து பராட்டவில்லை. எல்லாரும் இவ்வறாழ்க்கை நடத்த வேண்டுமென்று அவர் கூறவில்லை. பிரமச்சரியத்தையே அவர் ஆதரிக்கிறார். கிறிஸ்து உபதேசப்படி எல்லாரும் பிரமச்சாரிகளாயிருந்தால் வெகு சீக்கிரத்தில் உலகம் காலியாகிவிடுமென்று நாம் கூறவும் வேண்டுமா?

அது ஒரு பயங்காளித்தனமான போதனை. எனினும் அது உலகம் முழுதும் பரவியிருக்கிறது; அது பெண்ணுலகத்தை அவமதிக்கிறது; காதலைக் கேவலப்படுத்துகிறது. மனோகற்பிதமான சுவர்க்கத்தையடையும் பொருட்டு ஆண்கள் எல்லாம் ஆண்மையை இழந்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. பெண்கள் எல்லாம் தேவாலயத்தில் மௌனமாக இருக்க வேண்டுமென்றும், புருஷர்களுக்குக்

கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும், கணவன்மார் கட்டளைகளை மீறக்கூடாதென்றும் பால் கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்து ஆத்மாவின் ரக்ஷகனாயிருப்பது போல கணவன் மனைவியின் உடலின் ரக்ஷகனாயிருக்கிறானாம் ஆகவே, ஆகிக்கிறிஸ்தவர்கள் பெண்ணுலகத்தை அடிமைத்தே வந்தார்கள். பிரம்மசரியத்தையே மேலானதாக மதித்தார்கள். இல்லறம் இரண்டாம் பக்ஷமாகவே மதிக்கப்பட்டது.

மற்றும், பெண் அசுத்தமானவள் என்றும், ஆண்களைத் தப்பு வழியில் செலுத்துகிறவள் என்றும், மக்கள் வீழ்ச்சிக்குக் காரணமானவள் என்றும் பழைய ஏற்பாடு கூறுகிறது. "பெண்ணே! நீ நரகத்தின் வாயாய் ஆகிறாய்" என டெர்ட்டுலியன் கூறியிருக்கிறார் கலியாணம் ஒரு சாபத்தீடு என வேறொரு ஞானி கூறுகிறார். பெண் அரைவாசி வளரும் ஒரு கலைபென்றும் அசுத்தமானவள் என்றும் 13-வது நூற்றாண்டில் வாழ்ந்த வேறொரு கிறிஸ்தவ ஞானி கூறியிருக்கிறார்.

பெண்ணுலகத்தை கிறிஸ்து மதம் மட்டும் இழிவாகக் கூறவில்லை. "பெண்கள் அவமானத்துக்கு இருப்பிடமானவர்கள் அவர்களைப் பார்க்கவும் கூடாது" என ஹிந்துக்களின் மனுதர்மம் கூறுகிறது.

தத்துவமுறையில் பார்த்தால் தற்கால கிறிஸ்தவ ஒழுக்கத் திட்டங்கள் மிகவும் உயர்வானவை தான். ஆனால் அது அனுபவசாத்தியமானதல்ல. சுவர்க்க போகத்துக்காக ஆண் தன்மையை இழந்தவனே கிறிஸ்து மதக் கொள்கைப்படி மேலானவனாகக் கருப்படுகிறான் இல்லறம் இரண்டாம் பக்ஷமாகவே கருதப்படுகிறது. விபசாரதோஷம் ஏற்பட்டால் தான் விவாக விடுதலையுண்டு. விபசாரத்துக்கு கிறிஸ்து மதத்திட்டத்தில் இடமே இல்லை. சுமார் 19 நூற்றாண்டு காலம் இந்த ஒழுக்கத்திட்டம் அமலில் இருந்தே வருகிறது. ஆனால் அந்தத் திட்டத்தினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதையே நாம் இப்பொழுது முக்கியமாக கவனிக்க வேண்டும். சரியாக வேலைசெய்யும் திட்டங்கள் எல்லாம் உத்தமமானவை என்று கூறப்படுவதுண்டு. கிறிஸ்தவஒழுக்கத்திட்டப்படி நடக்க கிறிஸ்தவர்கள் ஒரு சிறிதாவது முயன்றிருந்தால் அந்தத்திட்டத்துக்கு ஒருவாறு மதிப்புக்கொடுக்க வேண்டியது தான். ஆனால் அந்த லக்ஷியத்தையடைய நாம் முயலவே செய்யாது இருக்

யந்திரங்கள் வேண்டாமா?

"மனிதவர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி" என்று நாம் கருதி இருந்த காலமும் அதேப்படியே யந்திரங்களை எல்லாம் "சைதான்" என்று பிரசாரம் செய்த காலமும் உண்டு. மனிதனின் இயற்கை முற்போக்கினுடையவும், அறிவு ஆராய்ச்சி வளர்ச்சியினுடையவும் தத்துவத்தை அறிந்த பிறகும் அவ்வளர்ச்சியை மேலும் மேலும் விரும்புகின்ற நிலையிலும், மக்களின் சரீர கஷ்டத்தை உணர்ந்து அதைக் குறைக்க வேண்டும் என்கின்ற ஆசையில் முயற்சி கொண்டிருக்கும் போதும் எந்த மனிதனும் யந்திரத்தை வெறுக்க முடியவே முடியாது. அன்றியும் கண்டுபிடித்தும் சாதேவேற்றுமே ஆகவேண்டும்.

ஏன் என்றால் மனித அறிவின் சுபாவ அனுபவத்தைக் கொண்டும் ஆராய்ச்சியைக் கொண்டும் காலுக்கு கால் சுருக்க வழியை கண்டு பிடிப்பதே இயற்கையாகும். அது மாத்திரமல்லாமல் ஜீவன்சரீரப் பிரயாசையை குறைத்துக்கொள்ள ஆசைப்படுவதும் இயற்கையாகும். இந்த இரண்டு சுபாவகுணங்களும் யந்திரங்களைக் கண்டு பிடித்து கையாடுதல் தீரும். ஆகவே அறிவும், ஆராய்ச்சியும் இல்லாத இடங்களில் தான் யந்திரங்கள் அருமையாய் இருப்பதும், அலட்சியமாய்க்கருதுதல் அந்த லக்ஷியத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று தான் முடிவு கட்ட வேண்டும்.

அந்த லக்ஷியத்தை உயர்ந்த அறிவாளிகள் எல்லாம் எதிர்க்கிறார்கள். இந்தியாவிலிருக்கிறதைவிட அவ்வளவு உயர்வான நிலைமையில் வேறெங்கும் கூடஇருக்கிறார்கள். ஏகபத்னி விரதம் விபசாரத்தையும் மற்றும் எண்ணற்ற முறை கேடான புணர்ச்சிக்கும் இடமளிக்கிறது. கிரியாம்சையில் அதனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறதென இனி ஆராய்ந்து பார்ப்போம்.

—(1)—

வதுமாய் இருக்குமே தவிர, மற்ற இடங்களில் அதாவது பகுத்தறிவு, ஆராய்ச்சி முன்னேற்றமுள்ள இடங்களில் யந்திரத்தாண்டவமே அதிகமாயிருக்கும்.

வியாச ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்டதாகிய "மனித வர்க்கத்திற்கு யந்திரங்கள் விரோதி" யந்திரங்கள் "பிசாசு" என்று நாம் கருதியதாகக்குறிப்பிட்டதான அறிவும், ஆராய்ச்சியும் கூடாது என்கின்ற எண்ணத்தின் மீதோ, இயற்கையோடு போராடவேண்டுமென்றோ, அல்லது மனிதன் சரீரத்தால் கஷ்டப்பட்டு, இம்சைப்பட்டுத்தான் ஆகவேண்டுமென்றோ கருதியல்ல. ஆனால் மற்றதைக் கருதி அவ்வபிப்பிராயம் கொண்டோம் என்றால் "யந்திரங்கள் பல பேர் பல்லாள் செய்யும் காரியத்தை வெகு சில பேர் சில நாளில் செய்து விட்டால் மற்ற ஆள்களுக்கும் மற்ற நாள்களுக்கும் ஜீவனத்திற்கு—கூலிக்கு மார்க்கம் எங்கே? அதன் மூலமாய் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு என்ன சமாதானம்?" என்று சொன்னவர்களின் வார்த்தைகளை நம்பினதாலேயே தவிர வேறில்லை.

இந்தப்படியே இன்றும் இன்னும் அனேகர் நினைத்துக் கொண்டும், நம்பிக்கொண்டும் யந்திரங்களை ஆட்சேபித்து வெறுத்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் இந்தப்படி எண்ணிக் கொண்டிருந்த நாம் அந்தக்காலத்திலும், இந்தப்படி இப்போது எண்ணிக்கொண்டிருக்கின்ற அனேகர் இப்போதும் தங்கள் தங்களைப் பொறுத்தவரை தங்கள் தங்கள் காரியத்திற்கு மனித சரீரவேலையை விட யந்திர வேலையையே விரும்பி அதை உபயோகித்தே தான் வந்தோம், மற்றும் வந்தார்கள், வருகிறார்கள்.

உதாரணமாக கால்கள் இருக்க, கட்டை வண்டிகள் இருக்க (கட்டை வண்டியும் இயந்திரம்தான். இருந்தாலும்) யந்திரத்தின் மூலமாய்த்தான் அதாவது ரயிலில் பிரயாணம் செய்தோம். யுந்திரத்தின் மூலமாய்த்தான் மோட்டாரில் பிரயாணம் செய்தோம். யந்திர மூலமாய்த்தான் கப்பலிலும் பிரயாணம்செய்தோம். யந்திர மூலமாகவே ஆகாயக் கப்பலில் பிரயாணம் செய்தோம். அதையே இன்னும் எல்லா மக்களுடைய போக்குவரத்து சாதனமாக ஆக்கவும் ஆசைப்படுகின்றோம்; மற்றவர்களும் ஆசைப்படுகின்றார்கள். ஆகவே இவற்றையெல்லாம் மனிதத் தன்மையுடன் கூடிய குற்ற

மற்ற இயற்கை உணர்ச்சி என்றுதான் சொல்ல வேண்டுமே தவிர இது எவ்வித குற்ற முள்ளதும் அநியாயமானதும் அநேக ஆயிரக்கணக்கான பேரைப்பட்டினி போடக்காரணமான அக்கிரமகாரியமென்றும் யாரும்சொல்லி இதற்காக யாரையும் கண்டிக்கவும் இவைகளை ஒழிக்கவும் முடியாது ஜீவசுபாவமே ஆசையின் உருவமாகும்.

ஆகவே யந்திரம் வேண்டாம் என்பது இயற்கையோடும் முற்போக்கோடும் அறிவு வளர்ச்சியோடும் போராடும் ஒரு அறிவீனமான—பிற்போக்கான வேலையாகுமே தவிர மற்றபடி பயனுள்ள வேலையாகாது.

உதாரணமாக 10 மூட்டைகளை ஒரு வண்டியில் ஏற்றி முன்னே கான்குபேர் இழுத்துக் கொண்டும் பின்னே கான்கு பேர் தள்ளிக்கொண்டும் உடல் வெயர்க்கவெஞ்சொட்ட மணிக்கு மூன்று மைல் தள்ளாடித் தள்ளாடி இழுத்துக் கொண்டு போவதும், அதே மாதிரியான 25 மூட்டைகளை ஒரு மோட்டார் லாரியில் ஏற்றி ஒரு மனிதன் கோகாமல் காற்காலியில் உட்கார்ந்திருப்பது போல் உட்கார்ந்து கொண்டு சுக்கானை மாத்திரம் பிடித்துத் திருப்பிக் கொண்டு மணிக்கு 25 மைல் போவதுமான இரண்டு வேலைகளையும் எடுத்துக் கொண்டால் இவற்றுள் சுயமரியாதைக்கு, ஜீவகாருண்யத்திற்கு—மனித சமூகத்திற்கு-முற்போக்கிற்கு-மற்ற ஜீவன்களைவிட மனிதனுக்கு பகுத்தறிவு என்பதாக ஒரு குணம் அதிகமாக உண்டு என்கின்ற "உயர்" குணத்திற்கு-எது ஏற்றது என்று கேட்கின்றோம்.

மற்றும் பாஷைகள் ஆதியில் எழுத்துக்கள் கூட இல்லாமல் சப்த ரூபமாய் இருந்ததும், பிறகு எழுத்துக்கள் ஏற்படுத்தப் பட்டதும், அவை கூரிய ஆணிகளால் ஏடுகளில் எழுதப்பட்டதும், பிறகு காகிதம் ஏற்பட்டதும், அதில் காணலில் எழுதினதும், உருக்குத் தகடுகளில் எழுதினதும். பிறகு பென்சிலில் எழுதினதும், டைப்பில் அடிப்பதும், அச்சடிப்பதும், அந்த அச்சும் மணிக்கு 100 பிரதிகளாக இருந்து இப்போது 10000 பிரதிகள் வீதம் அச்சு அடிக்கும்படியானதும் அதுவும் 12X8க்குமாயிருந்த அகல காகிதத்தில் மாத்திரம் அடிக்கும்படியாயிருந்து இப்போது 60 X 40க்குமாக உள்ள பெரிய காகிதத்தில் அச்சடிக்கக் கூடியதானதுமான காரியங்கள் படிப்படியாய் விருத்தி ஆகியிருக்கின்றதை பார்த்துக் கொண்டும், அதன் பலன்களை அனு

பவித்து கொண்டும், எதாவது ஒரு வகையில் ஒவ்வொருவரும் அதைச் செய்து கொண்டும் இருக்கின்றோம். இவையெல்லாம் யந்திர பலன்கள் அல்லவா? என்றும், இவற்றில் எது தள்ளுவதற்குரியது? என்றும், இவை இல்லாதிருந்தால் அவ்வளவு பேருக்கு எவ்வளவு காலைக்கு வேலையிருக்கும் என்றும் கேட்கின்றோம்.

இது தவிர மற்றொரு உதாரணத்தைக் கவனிப்போம். சங்கராச்சாரிமடாதிபதி என்று சொல்லப்படும் ஆட்கள் ரயிலில் ஏறுவது நீசத்தனமென்றும், மாட்டு வண்டி, குதிரை வண்டி ஆகியவைகளில் ஏறுவது ஜீவ இம்சை யென்றும், கருதிக் கொண்டு மரக்கட்டையில் பல்லக்கு செய்து அதற்குத் தந்தம், வெள்ளி, தங்கம் முதலிய தகடுகள் போட்டு அதன் மீதுதான் ஏறிஉட்கார்ந்து கொண்டு தண்டுக்கு 12 பேர் வீதம் 4 தண்டுக்கு 48 பேர் மாறி மாறி என்று முக்கிக் கொண்டு மணிக்கு 4 மைல் வீதம் தூக்கி ஓடுவதைப் பார்க்கின்றோம். இது யந்திர சம்மந்தமில்லாதது என்று கூறத்துணிந்து கொண்டாலும் (கண்டிப்பாய் பார்த்தோமானால் பல்லக்கு என்பதும் ஒரு யந்திரமேயாகும்) இந்த வாழ்வு காட்டுமிராண்டி உலக வாழ்வா? அல்லது நாகரிக உலக வாழ்வா? என்பதை யோசித்துப் பாருங்கள். மனிதன் தூக்குவதை விட்டு மாடோ, கழுதையோ, குதிரையோ, ஒட்டகமோ, யானையோ அமைப்பதாக வைத்துக் கொண்டாலும், அதுவும் அதற்கு சற்று அடுத்த காட்டு மிராண்டி வாழ்வா அல்லது நாகரீக - ஜீவகாருண்யமுடைய வாழ்வா — என்றும் கேட்கின்றோம்.

ஆகவே இவைகளிலிருந்து யந்திரம் மனிதனுக்கு அவசியமென்றும், சௌகரியமான தென்றும், ஜீவகாருண்யமுடைய தென்றும், முற்போக்குக்கும் நாகரீகத்திற்கும் ஏற்றதென்றும், இயற்கை உணர்ச்சியில் பட்டதென்றும், அறிவு ஆராய்ச்சியின் பயனென்றும் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும்.

ஆனால்

ஆனால் முன் சொல்லப்பட்ட அதாவது "யந்திரங்கள் பெருகுவதால் தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் போய் ஜீவனத்திற்குக் கஷ்டப்பட வேண்டியதாகுமே" என்பதற்குச் சமாதானம் சொல்லியாகவேண்டும். இதற்கு பதிலாக நாம் அவர்களைக் கேட்பதென்னவென்றால்,

தொழிலாளி என்று ஒரு கூட்டம் என் இருக்கவேண்டும்? முதலாளி என்று ஒரு கூட்டம் என் இருக்க வேண்டும்? இது யாருடைய கட்டளை? என்ன அவசியத்தைப் பொறுத்தது? என்று அவர்களை நாம் முதலில் கேட்கிறோம்.

பிறகு பாடுபடுபவன், சோம்பேறி, கஷ்டப்படுபவன், சுகப்படுபவன், வேலை செய்பவன், வேலையின் பயனை அனுபவிப்பவன், ஏமாறுகிறவன், ஏமாற்றுகிறவன் என்பன போன்ற பிரிவுகள் மனித சமூகவாழ்க்கையில் இருக்கும்படியாகவே வாழ்க்கைத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்பதற்கு ஏதாவது அவசியமும் ஆதாரமுமுண்டா என்பது நமது இரண்டாவது கேள்வியாகும்.

மனிதன் தொழில் செய்வது என்பது மனித வாழ்க்கையின் சௌகரியம் அல்லது தேவையின் அவசியம் என்பதிற் காகவா? அல்லது முதலாளி, மிராசுதாரன், சோம்பேறி ஆகியவர்கள் வேலை செய்யாமல் சம்பாதிக்கவோ பணம் சேர்க்கவோ வேண்டிய அவசியத்திற்காகவா என்பது மூன்றாவது கேள்வியாகும்.

இம்மூன்று கேள்விகளுக்கும் பதில் அறிந்தோமானால் வேலை என்பதும், வேலை இல்லாத திண்டாட்டம் என்பதும் ஒருவனை ஒருவன் கொடுமைப்படுத்துவதுதான் இந்த முறைகள் என்பதும் விளங்கிவிடும்.

இவை தருபுறமிருக்க, வேலைகளின் கூலிகளை உயர்த்தி வேலை நேரத்தை குறைத்து, முதலாளிகளின் லாபத்தையும் குறைத்து, ஒரு வரையறை ஏற்படுத்தி, உள்ள நேரத்தையும் கூலியையும் எல்லா வேலைக்காரர்களுக்கும் பங்கு வரும்படியான ஒரு திட்டம் போடுவோமேயானால் அதாவது மோட்டார் பஸ்தொழிலாளர்கள் யூனியன் வைத்து வருகின்ற பிரயாணிகள் சத்தத்தை உபயோகித்தி கிடைத்த வாடகையை எல்லோரும் பங்கிட்டுக்கொள்வது போலச் செய்தால் வேலையில்லாத்திண்டாட்டம் தானாகவே ஒருவாறு ஒழிக்கப்பட்டு விடுமா இல்லையா என்று கேட்கின்றோம்.

இன்று, இன்றைய வாழ்க்கை நிலைமையைப் பார்த்தால் மனிதன் வேலை செய்வதற்காகவே பிறருக்கு அடிமையாய்

உழைப்பதற்காகவே பிறக்கிறானே யொழிய சுகப்படுவதற்கில்லை என்றும் ஆதலால் அவன் வேலை செய்வதற்காக ஒரு தொழில் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும் என்றும்தான் ஏற்படுகின்றது. இதுவும் தன் வயிற்றுக்கு வேண்டிய அளவு கூட கிடைக்க முடியாத கூலிக்கு முழு கோத்தையும் செலவு செய்து பாடுபடவேண்டும் என்பதாகக் காணப்படுகிறது. இது பகுத்தறிவில்லாத மிருக வாழ்வைவிட மிக மோசமான வாழ்வே யாகும். எப்படி எனில் அவற்றிற்காவது உத்திரவாதம் (ஒரு காரண்டி) இருக்கின்றது. அதாவது அதன் எஜமான் வயிறு கிறைய அதற்கு வேண்டிய ஆகாரம் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கிறான். மனித வேலைக்காரனுக்கோ உத்திரவாதமே கிடையாது. இன்னும் பட்சிகள், காட்டுமிருகங்கள் ஆகியவைகளில் எதற்கும் எவ்வித வேலையும் செய்யாமல் வாழும் சௌகரியமிருக்கின்றது.

இப்படியிருக்க பகுத்தறிவு இருக்கும் காரணத்திற்காக மனிதன் 100க்கு 90 பேர் ஆகாரத்திற்கே வேலை செய்ய வேண்டியது என்பதும், அதுவும் காரண்டி இல்லாத அடிமையாயிருந்து வேலை செய்வது என்பதும், அதுவும் சரியாய் கிடைக்காமல் பட்டினியாய் கஷ்டப்படுவது என்பதும் இயற்கைக்கு மாறுபட்ட ஒரு பெரிய அக்கிரமமாகும். ஆகவே வேலையில்லாக் கஷ்டம் ஏற்பட்டு ஜனங்கள் பட்டினி கிடந்து பாதவிக்க ஆரம்பித்தால்தான் "தங்களுக்கு பகுத்தறிவும் வன்மையும் இருந்தும் தாங்கள் முட்டாள் தனமாய் பாடுபடுவதும் தங்களைப்போன்ற பிறரால் ஏய்க்கப்படுவதும் ஏன்? என்கின்ற காரணத்தை உணர முடியும். உணர்ந்து சமநிலையை அடைய முயற்சிக்கவும் முடியும்.

அதை விட்டு விட்டு "முதலாளி, தொழிலாளி நிலைமையும், மிராஸ்தார், உழவன் நிலைமையும் உலக வாழ்க்கையின் சௌகரியத்திற்கு அவசியம்" என்பதாகச் சொல்லி அதுவும் "கடவுள் செயலால் முன்ஜன்மத்தின் கர்ம பயனால், தலை விதியால் ஏற்பட்டது" என்று சொல்லிக்கொண்டு அவற்றை நிலை நிறுத்திக்கொண்டே எவ்வளவு கூலி வாங்கிக்கொடுத்தாலும் மனித வர்க்கத்தினரில் பெரும்பான்மையானவர்களின் கவலையும், தொல்லையும், கொடுமையும் ஒழியவே ஒழியாது. எப்படியெனில் ஜாதி விதியாசத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு சமத்துவம் கொடுத்தாலும் அது எப்படி பயன் படாதோ, அதுபோலவே முதலாளி தொழிலாளி முதலிய பாகுபாடுகளை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கொடுக்கும்

எவ்வித சுதந்தரமும் பயன்படாமலே போய்விடுவதோடு கீழ் நிலை மேல் நிலை என்பதும் மாற்றவே முடியாததாகிவிடும். எனெனில் தொழிலாளி, முதலாளி, உழவன், ஜமீன், மிராஸ்தாரன் என்பவைகளும் ஒருவித வருணாச்சிரம தர்மமேதவிர வேறல்ல. ஆச்சிரமங்கள் என்றாலே படிகள்—நிலைகள் என்பதுதான் கருத்தாகும்.

நமது நாட்டில் பிறவியிலேயே பல படிகள் இருப்பதாலும், அதனாலேயே நாம் சதா கஷ்டப்படுவதாலும் தொழில் வாழ்க்கையில் உள்ள படிகளை நாம் கவனிக்கவே நேரமும் ஞாபகமும் இல்லாதவர்களாய் இருக்கின்றோம். மனிதன் உண்மையான சமத்துவமடைய வேண்டுமானால் பிறவிப்படிகளையும் தொழில்படிகளையும் கடக்கவனாகத்தான் இருக்க வேண்டும். அவ்விரண்டு படிகளையும் ஒழித்த—அவ்விரண்டு படிகளும் ஒழிந்த நிலைதான் சமதர்ம நிலை என்று சொல்லப்படுவதாகும்.

இந்த, இவற்றிற்கெல்லாம் முக்கியமாக இன்னொரு விஷயம் உண்டு. அதை சரியாக உணர்ந்து கவனித்தோமானால் மேல் கண்ட கஷ்டங்களைப்பற்றிய கவலைகள் கூட நாம் அதிகம்படவேண்டிய அவசியமிராது. அதென்னவெனில், யோசனையில்லாமல்கண்டகண்டபடி ஜனத்தொகையைவிர்த்தி செய்வதாகும்.பிள்ளைகளைப் பெறுவதாகும். 2 ஏக்கர் பூமியுள்ளவன் 100 மாடுகளைவாங்கி வளர்ப்பானேயானால் எப்படி அவனால் அந்த மாடுகள் போதிய தீனி கிடைத்து ரக்ஷிக்கப்படமுடியாதோ அதுபோலவே மனித சமூகமும் தேவைக்கும் தன்னால் தாங்குவதற்கும், அதாவது காப்பாற்றக் கூடியதற்கும் அதிகமாகவும், தேசத்தின் காலநிலைமைக்கு மேலாகவும் பிள்ளைகளைப் பெற்று கஷ்டப்பட்டு தனது ஆகாரத்தில் பங்கு கொடுத்து கடைசியில் இருவருக்கும் போதுமான ஆகாரமில்லாமலும், போதுமான ஆதரிப்பு இல்லாமலும் கஷ்டப் பட்டுக்கொண்டு இருப்பதை ஒழிக்காமல் வீணாய் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் என்ன பயன் என்பது முக்கியமாய் கவனிக்கத் தக்கதாகும்.

இந்திய நாட்டு நிலைமை நமக்குத் தெரிய சுமார் 40, 50 வருஷகாலமாகவே மக்களுக்கு "வேலையில்லாமல்" வெளி நாடுகளுக்குக் கூலியாகச் செல்வதே வழக்கமாக இருந்து வந்திருக்கின்றது. இது மாத்திரமல்லாமல் அடிக்கடி பஞ்சமும்

கொள்ளை நோயும் வந்திருக்கின்றன. இது இந்த நாட்டு சுயமரியாதைக்கேயிகவும் கேடானதாகும். அளவுக்கும் சக்திக்கும் மீறி பிள்ளைகளைப் பெறுவதால் யாருக்கு என்ன லாபம்? என்று யோசிக்க வேண்டும்.

"உலகம் விருத்தியாக வேண்டாமா" என்கின்ற சொல் சுத்த முட்டாள் தனமானதும் சிறிதும் பொருளற்றதுமான சொல்லே ஒழிய அது ஒரு கவனிக்கத்தகுந்த சொல் அல்ல வென்பதே நமது அபிப்பிராயம், சம்போக விஷயங்களில் கவலையற்றும் முறட்டுத்தனமாயும் அளவுக்கு மீறியும் நடந்து கொள்வதால் மனிதர்களுக்கு ஏற்படும் வியாதிகளைப் போலவேதான், குழந்தைகள் ஏற்படுவதும் என்பதே தவிர அதற்கும் இதற்கும் சிறிதும் வித்தியாசமேயில்லை. சம்போக உணர்ச்சி இந்தஉலகத்தில் உள்ள ஜீவஜந்துக்களில் மனிதனைத் தவிர வேறு எந்த ஜீவனுக்கும் குழந்தை பெறுவதற்காக என்கின்ற எண்ணத்தின்மீது தோன்றுவதே கிடையாது. மனிதன் பகுத்தறிவுக்காரன் என்கின்ற ஆணவத்தால் அவனுக்கு ஏற்படும் அனேக முட்டாள் தனமான செய்கைகளைப்போல் குழந்தைபெறவேண்டுமென்கின்ற முட்டாள்தனமும் ஏற்பட்டு அது ஒரு ஆசையாகி பிறகு அது ஒரு சொத்தாகி பிறகு "மாகஜித்தற்று" உதவும் காரியமாகவுமாகி கடைசியில் மான கஷ்டமும் சொந்தாவும் பட்டு மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லாததாய்முடிந்து விடுகிறது.

மேலும் பிள்ளை பெறுவதினாலேயே மொத்த ஜன சங்கியையில் பகுதியான பெண்கள் சமூகம் அடிமையாகி அனேக ஆபத்துக்களுக்கும் வியாதிக்கும் உள்ளாகி அற்ப ஆயுளுடன் கஷ்டமும் படவேண்டியதாகி அவர்களது வாழ்வே மிக்க பரிதபிக்கத்தக்க வாழ்வாக முடிகின்றது. பெண் அடிமைக்கு காரணமே அவர்கள் பிள்ளை பெறுவதும், அதிலும் அதிகமான பிள்ளைகளைப் பெறுவதும், அதனால் உடல் பலவீனமுடையவர்கள் ஆவதும், பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கே என்று கருதுவதால் சுதந்தரமும் வீரமும் இன்றி அடிமையாவதுமான காரியங்களுக்கு ஆளாக வேண்டியவர்களுமாகிறார்கள். பெண்கள் விஷயம் இப்படி இருப்பதோடு பொதுவில் வேலையில்லா கஷ்டத்தை நீக்கவும், மக்கள் கவலையும் தொல்லையும் கஷ்டமும் இல்லாமல் இருக்கவும் பிள்ளைப் பேற்றைக் குறைப்பது என்பது ஒரு தக்க வழியாகும்.

ஒரு சமயம் இவையெல்லாம் யாருக்காவது பிடித்த மற்ற தாருமே யானால் வேறு இன்னம் ஒரே ஒரு வழிதான் உண்டு னன்று சொல்லுவோம். அதென்ன வெனில் எவனொருவன் தன் தேவைக்கு மேல் சொத்தும் ஸ்திதியும் வைத்திருக்கின் றானோ, அவனைக் குற்றவாளியாக்கி திருடனுக்கு உண்டான தண்டனையைக் கொடுப்பது என்கின்ற ஆட்சியை ஏற்படுத்து வது தான்.

இந்த ஆட்சி ஏற்பட்டு விட்டால் பிறகு யாருக்கு வேலை இருந்தாலும் யாருக்கு வேலை இல்லாவிட்டாலும் ஜீவனம் சரியாகும். இதற்காக அதிக கவலையும் பட வேண்டிய தில்லை. இத்தப்படிக்கல்லாம் இல்லாமல்காட்டுச் செல்வத்தை யெல்லாம் ஒருவன் தன்னிடமே வந்து சேரும்படியான முறையை மனித வாழ்க்கைக் கொள்கைகளாக வைத்துக் கொண்டு பல பேர்கள் பட்டினி இருந்து கொண்டு இருப்பதும் என் பட்டினியாய் இருக்கிறார்கள் என்று கேட்டால் வேலை கள் கிடைக்காதால் பட்டினியாய் இருக்கின்றார்கள் ஆத லால் யந்திரங்களையெல்லாம் ஒழித்து விட்டு கட்டப்பாரையும் சம்மட்டியும் வாங்கிக் கொடுத்து வேலை வாங்கவேண்டுமென் றும் சொல்வதானால் இது எவ்வளவு அக்கிரமமானதும் அயோக்கியத்தனமானதும், திருட்டுத்தனமானதுமான காரி யம் என்பது யோசித்தால் விளங்காமல் போகாது. ஆகையால் காட்டுக்கும் முற்போக்குக்கும் மனித சமூக சுகரிக வளர்ச் சிக்கும் யந்திரங்கள் மிகவும் முக்கியமானது என்று சொல் வதோடு அவற்றின் மூலம் மக்கள் சரீரப்பிரயாசையில் இருந்து விடுதலையாக்கி னைப்பதுவும் இயற்கையும் அவசியமும் ஆன தென்றும் சொல்லுவதோடு எஜமான், வேலைக்காரன், முத லாளி, தொழிலாளி, ஜமீன்தாரன், குடியானவன் என்பவை களான படிகள் நிலைத்திருக்க வேண்டுமானால் மாத்திரம் தான் ஒரு காட்டுக்கு யந்திரம் எதிரியே ஒழிய மற்றபடி சம தர்மம் விரும்பும் காட்டுக்கு யந்திரமே சரியான அஸ்திவார மாகும் என்றும் தைரியமாய்ச் சொல்லுவோம்.

பேதம் போக்குவீர்!

(S. சிவப்பிரகாசம்.)

(நானென் எவினேன் எ—மெட்டு.)

பல்லவி.

பேதம் போக்குவீர்!—பிறவியிலே (பே)

அநுபல்லவி.

நீதமிலா மத போதனையால் மட
வாதமெனோ? பழி காணே மிருத்திடும் (பே)

சரணம்.

பிறவியிலுயர்வு தாழ்வுகளேது?
பேதை மதியோர் கூறும் வாது—மிகவும்
பீடையதனை ஓடச் செயவே (பே)

மச்சளில் உயர்ந்தோர் உருவமும் வேறோ?
மதிப்பின்றித் தாழ்ந்தோர் உரு வேறோ?—அந்த
மாதர் மணப்பின் கருவாகாதோ? (பே)

மலத்தினுங்கேடாய் மதிப்பதால் நாமே
மாபெருஞ் சமூகமிழந்தோமே!—நாட்டில்
மாசுறு மதங்கள் கூறும் (பே)

ஆசாங்கூறும் ஆண்திகம் போக்கி
யடைவோம் சமமே! துயர்நீக்கி—நாளும்
ஆண்பெண் அடிமையான மூட (பே)

மூடநம்பிக்கையை விட நாஸ்திகம் சிறந்தது.

(ஆங்கில அறிஞர் பேக்கன்)

[ஆங்கிலத்தில் நிறம்பட உரைநடை எழுதும் ஆசிரியர்களில் பேக்கன் என்பவர் சிறந்த ஒருவர். இவர் எழுதிய கட்டுரைகள் யாவும் செல்நயமும் பொருள்நயமும் பொருந்தியன. ஆங்கிலக் கற்றவர்களில் பேக்கனுடைய கட்டுரைகளை வியவாதாரிலர். இவர் மதத்தை வெறுப்பவரல்லர்; நாஸ்திகரல்லர். மதநம்பிக்கையுடையவர்; ஆஸ்திகர். இவர் மூடநம்பிக்கையால் விளையும் தீமைகளைப்பற்றிக் கூறியிருக்கும் அரிய மொழிகள் மிகவும் பாராட்டத்தக்கனவாகும். S. O. பான்.]

கடவுள் நம்பிக்கையில்லாதது குற்றமுள்ளதல்ல; கடவுளை நம்பாமையால் தீமை உண்டாகி விடாது; ஆனால் கடவுளைப் பற்றிய மூடநம்பிக்கையினால் பெருந் தீமையுண்டாகும். கடவுளை நம்பாதிருத்தல் "நம்பிக்கையில்லை" என்ற அளவோடு நின்றுவிடுகிறது. ஆனால் மூடநம்பிக்கை மிகவும் வெறுத்து ஒதுக்கத் தகுந்த அவ்வளவு தீமைகளை உண்டாக்கி விடுகின்றது

"கடவுள் ஒரு குழந்தையை விழுங்கி விட்டது" என்பது போன்ற அதனமை நிறைந்த கற்பனைக் கதைகளைக் கூறுவதை விட—இத்தகைய கட்டுவதை விட, கடவுள் இல்லையென்று கூறுவது எவ்வளவோ மேலான அறிவாகும். இத்தகைய மூடநம்பிக்கை மனித சமூகத்துக்கும் மிகுந்த துன்பத்தை உண்டாக்குகிறது.

நாஸ்திகர்கள் இயற்கை நியதிகளை மீறாமல் அவைகளுக்குக் கட்டுப்படுகிறார்கள்; இயற்கை நியதிக்குத் தக்கவாறு சட்ட திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்; சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் அறிவை யுபயோகித்து நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் மூடநம்பிக்கையுள்ளவர்களோ அறிவில்

லாதவர்களாகவும், நன்மை தின்மை உணராதவர்களாகவும், அடிமைப் புத்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

உரோமாபுரியில் அகஸ்டர், சீசர், முதலியவர்கள் வாழ்ந்த காலத்தில் நாஸ்திகம் பரவியிருந்தது. அப்பொழுது நாஸ்திகத்தினால் மக்களுக்கு ஒரு வித தீமையும் உண்டாகவில்லை. (பெரும்பாலும் நன்மையே விளைந்தது) ஆனால் மூடநம்பிக்கை காலத்தில், மூடநம்பிக்கை நிறைந்த தேசங்களில் எல்லாம் குழப்பங்களும், கலவரங்களுமே மிகுந்திருந்தன மூடநம்பிக்கையினால் குழப்பமடையாத தேசமே இல்லையென்று கூறலாம்.

மூடநம்பிக்கைக்கு அதிகாரிகளாக இருப்பவர்கள் பொதுஜனங்கள். பொதுஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடப்பவர்களுக்குத் தேசத்தில் மதிப்பிருக்காது. ஆகலால் அறிவுபடைத்தவர்களும் கெட்டிக்காரர்களுங்கூட மூடநம்பிக்கையை எதிர்த்து நிற்கத் துணிவதில்லை; அவர்களும் மூடநம்பிக்கையுள்ள பொதுஜனங்களைப் பின்பற்றத் துணிகிறார்கள்.

ஒரு காரியம் சரியா, தவறா என்பதைக் காரணங்களைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும். சரியான காரணங்களைக் கொண்டு எற்படும் காரியங்களே உண்மையானதாக இருக்க முடியும்; நன்மை பளிப்பதாகவும் இருக்கக்கூடும். ஆகவே காரணங்களைக் கொண்டு காரியங்களை உண்டாக்குவதே — நிலைநிறுத்துவதே அறிவுடைமையாகும். முதலில் காரணத்தையும், பிறகு காரியத்தையும் கண்டுபிடிப்பதே அறிவின் செயலாகும். ஆனால் மூடநம்பிக்கையுள்ள நாடு இதற்கு மாறாக முதலில் காரியத்தையும், பிறகு காரணத்தையும் கூறுகிறோம். முதலில் காரணத்தைக் கூறி பிறகு காரியத்தை நிலைநிறுத்த முடியவில்லை. இது தலைகீழான பாடமாகும். ஒவ்வொரு பழக்க வழக்கங்களுக்கும் புதிய புதிய காரணங் கண்டுபிடித்துக் கூறி அப்பழக்க வழக்கங்களை நிலைநிறுத்த முயற்சிக்கிறோம் இது மூடநம்பிக்கையின் விளைவேயாகும்.

மூடநம்பிக்கைக்குக் காரணங்கள் பல; அவை வருமாறு:—

1. அறிவு வளர்ச்சிக்குச் சிறிதும் துணை செய்யாததும், பணத்திற்கு நஷ்டத்தை உண்டாக்குவதும், தெய்வீகமானவை யென்னும் நம்பிக்கையினால் மனதிற்கு மாத்திரம் ஊக்தியளிப்பதுமான பலவித சடங்குகளைச் செய்வதும் மூடநம்பிக்கை நிலைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் காரணமாகும்.

2. ஜாதி, மதங்களின் வித்தியாசத்தைப் பிரித்துக்காட்டக் கூடிய ஆண் ஆபாணங்களும், மதச் சின்னங்களும், ஆகிய வெளி வேஷங்களும் மூட நம்பிக்கைக்கு ஆதாரமாகும்.

3. பழைய பழக்க வழக்கங்கள் எவ்வளவாயினும் அவைகளின் நன்மை தீமைகளை ஆராய்வதில்லை; அவைகளிடம் அதிக மரியாதை வைத்து அவைகளைக் கொண்டாடுதல். இவ்வாறு செய்ததனால் உண்மையான மதம் இன்னதென்றே அறிய முடியாமல் அழிந்துவிட்டது. இச் செயலும் மூடநம்பிக்கைக்குக் காரணமாகும்.

4. குருமார்கள் என்பவர்கள், தாங்கள் உடம்பை வருத்தி வேலை செய்யாமல் பொருள் சேர்க்கவும், சுகமாக வாழவும் ஆசை கொண்டு எற்படுத்திவுள்ள பலவிதமான சூழ்ச்சிகளையும் நம்புதல்; இந் நம்பிக்கையினால் எமாறுதல்; ஆகியவையும் மூடநம்பிக்கையை வளர்ப்பதாகும்.

5. மனத்தில் கர்வத்தை உண்டாக்குவதும் புதுமையை உண்டாக்குவதுமான எண்ணங்களைக் கொண்டாடுதலும் மூட நம்பிக்கைக்கு காரணமாகும்.

6. மனிதன், இன்பதுன்பம் அடைவதுபோலவும், வேண்டியவர்கு நன்மையும், வேண்டாதவர்களுக்குத் தீமையும் செய்வதுபோலவும், பெண்டுபிள்ளைகளுடன் வாழ்வதுபோலவும், இழிந்த காரியங்களையும் வெறுக்கத் தகுந்த காரியங்களையும் செய்வது போலவும், கடவுளையும் கற்பனை செய்து மனிதனைப்போல வைத்துக் கொண்டாடுவதனாலும் மூடநம்பிக்கை உலகில் பரவுகிறது.

7. மனிதன் அறிவுவளர்ச்சி பெறாமல் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் தனது உடம்புக்குக் கெடுதி அதாவது நோய் மூதலியவை வற்பட்டபோது அவைகளைச் சிகிச்சையின் மூலம் நீக்கிக்கொள்ள வழி தெரியாமலிருந்தான். அப்பொழுது அவன் எவைகளைத் தெய்வமென்று நம்பிக்கொண்டிருந்தானோ அவைகளைத் தனது தீமைகளையும் நீக்கும்படி வேண்டிக்கொண்டான். இவ்வாறு தமக்கு சேர்ந்த தீமைகளை நீக்குமாறு தெய்வங்களை வேண்டிக்கொள்ளுதல் - மனிதனுடைய காட்டுமிராண்டிப் பருவத்தில் எற்பட்ட பழக்கம் என்று அறியாமல், அப் பழக்கத்தையே இப்பொழுதும் கொண்டாடிக்கொண்டிருப்பதும் மூட நம்பிக்கை வளர்வதற்கு வழியாகும்.

மூட நம்பிக்கையை ஒரு குரங்குக்கு ஒப்பிட்டுக்கூறலாம். குரங்கு இயல்பிலேயே குறும்புத்தனமுடையது. அதன் கையில்

பெற்றோருக்குச் சில உபதேசங்கள்.

(இங்கர்சால்.)

வேதங்கள் கடவுள் வாக்கென நம்பாத பெற்றோர் வேதங்கள் கடவுள் வாக்கெனத் தம் பிள்ளைகளுக்குப் போதனை செய்யக் கூடாது. பெற்றோர் பிள்ளைகளிடத்தில் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும். டாசாங்து ஒரு நல்லவழக்கமல்ல. இயற்கைக்கு மாறான விஷயங்கள் உண்மையானவையல்ல; யதிக்கத்தக்கனவு மல்ல.

தம் மக்கள் மனம்குறுகும்படியும், மூடநம்பிக்கைகளில் ஆழும்படியும், ஸ்தம்பித்துப் போகும்படியும் பகுத்தறிவாளர் விடக் கூடாது. குழந்தைகளின் சிந்தனாசக்தி அசுத்தமடையும்படியும் பகுத்தறிவாளர் விடக்கூடாது. பொதுவாகக் குழந்தைகள் திக்கற்றவர்களாயிருக்கிறார்கள்; எனவே அவர்களது ஆதரவற்ற நிலைமையை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு அவர்களது உள்ளத்து பொய்க்கருத்துகளைப் புகுத்தி பீதியுணர்ச்சியை உண்டு பண்ணி

அகப்படக்கூடிய பொருள்களை அது சும்மா வைத்திருக்குமா? அந்தப் பொருள்தான் உருப்படியாக இருக்குமா? அதுபோல் மூடநம்பிக்கையே கெடுதியாக உருவெடுத்ததாகும். அது மதத்தோடு சேர்ந்திருக்குமானால் இன்னும் அதிக தீமையையே செய்து தீரும். அந்த மதமும் சின்னபின்னமாகி மக்களுக்கும் தீமை செய்யும் என்பதில் என்ன சந்தேகம். *

நல்ல ஆதாரமானாலும் அவற்றை கள்ளபட வைத்திருப்போமானால் கடைசியில் அவை புழுவாக மாறிவிடுகிறது. அதுபோல நல்ல மதமும் கூட கள்ளபட்டவுடன் பல கடுங்குகளாக மாறுகிறது.

---

* மூடநம்பிக்கையே மதம் உண்டாவதற்குக் காரணம். மூடநம்பிக்கை ஒழியுமானால் மதமும் ஒழிந்துவிடும். பகுத்தறிவை ஆதாரமாகக்கொண்டது என்று கூறும் எந்த மதமும் மூடநம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்டது என்பதில் ஐயமில்லை. பகுத்தறிவை ஆதாரமாகக்கொண்டு ஒரு மதம் இருக்குமானால் அதில் கடவுள், ஆன்மா, சுவர்க்க நரகம் முதலியவை இருக்க முடியாது. S. C.

அவர்களது ஆத்மாவைச் சிறைப்படுத்துவது மகா கொடிய பயங்கரச் செயலாகும். இளவயதிலேயே சிறுவர் சிறுமியர் உள்ளத்தினிடமாக பீதியைப் புகுத்துவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

வைதீகப் பித்தலாட்டமான கடைசி நான் நியாயத் தீர்ப்பை எண்ணி குழந்தைகள் மனம் புண்ணாகும்படி பகுத்தறிவாளர்பார்த்துக்கொண்டு இருக்கவே கூடாது. குழந்தைகளின் உடலுக்கு ஆபத்து ஏற்பட்டால் எப்படித்தடுத்து எதிர்ப்பார்களோ அப்படியே அவர்களது உள்ளத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் தடுத்து எதிர்த்துப்போராட வேண்டும். ஆத்மாவின் உரிமைகளையும் பகுத்தறிவாளர் ஒப்புக்கொள்ள வேண்டும் பாதிரிமார் கடத்தும் ஆயிரமாகிழமைப் பள்ளிக்கூடங்களில் கடவுளை நம்ப வேண்டியது மகன் கடமையென்றும், கடவுளுண்மைக்கு ருசுக்கள் தேவையில்லையென்றும், நடிக்கைஉண்மைகளுக்கு அதிகமானதென்றும் மதம் பகுத்தறிவைவிட மிகவும் மேலானதென்றும் போதிக்கப்படுகின்றன. இயற்கை உணர்ச்சிகளை அவர்கள் உபயோகப்படுத்தக் கூடாதென்றும், சந்தேகம் கொள்ளக்கூடாதென்றும், விஷமத்தனமான கேள்விகளை கேட்கக்கூடாதென்றும், அவர்களது ஆசிரியர்கள் போதனைகளை அப்படியே நம்பவேண்டும் என்றும் போதனை செய்யப்படுகின்றன. இவ்வண்ணம் குழந்தைகளின் மனம் ஆதியிலேயே அசுத்தப்படுத்தபடுகின்றன; அடிமைப்படுத்தப்படுகின்றன. பூமியின் ஆகர்ஷணசக்தியைப்பற்றிய நியூடனின் அபிப்பிராயத்தையும், காலிலியோ அபிப்பிராயங்களையும், கெப்லர் அபிப்பிராயங்களையும் பூமி எப்பொழுதும் சுற்றுகிறதென்ற உண்மையையும் மதமும் பள்ளிக்கூடத்துக்கு வந்தக் கல்விமானாவது தன் பிள்ளைகளை அனுப்புவானா?

அறிவுள்ள எந்த மனிதனாவது பைபிளில் அடங்கியுள்ள சூரிய சாந்திரத்தையும் வான சாந்திரத்தையும் தம் மக்களுக்குப் போதிப்பானா? உண்மையையுணர்ந்தறியவும் மனோவாக்குகாயங்களில் சுத்தமாக இருக்கவும் பிறரிடம் கருணை காட்டவும் நீதியாக நடக்கவும் குழந்தைகளுக்கு முக்கியமாகப் போதனை செய்யவேண்டும். எப்பொழுதும் சுதந்திரத்தை விரும்புமபடியும் ஒரு உயர் வான லக்ஷ்யத்தை முன் நிறுத்தி உழைக்கும்படியும் குழந்தைகளுக்குப் போதனை செயயவேண்டும்.

ஒரே சீரான இயற்கை விதிகளையும் காரணகாரியக் கோட்பாட்டையும் நம்பும் "அவிசுவாசி" பண்டைக்காலத்து அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன என்றும், மக்கள் கூட்டோடு சுவர்க்கம் புகுந்திருக்கிறார்கள் என்றும் சில மீனைகளைக் கொண்டு லக்ஷோபி லக்ஷம்

ஜனங்களின் பரியாற்றப்பட்டதென்றும், மக்கள் உடலையும் தணி கனையும் எரிக்க தீ மறுத்துவிட்டதென்றும், இரும்பு தண்ணீரில் மிதந்ததென்றும், சூரிய சந்திர ஓட்டம் தடுக்கப்பட்டதென்றும் மந்திரங்களினால் நோய்கள் குணப்படுத்தப்பட்டன என்றும், பூமி எதிர்முகமாகச் சுற்றுப்படி செய்யப்பட்டதென்றும், பேய்கள் பெண்கள் புருஷர்கள் உடலில் வாசம் செய்கின்றன என்றும், இறந் தோருக்கு உயிர் கொடுக்கப்பட்டதென்றும் தம் மக்களுக்கு ஏன் போதனை செய்யவேண்டும்?

அத்தகைய அற்புதங்கள் நிகழ்ந்ததற்கு தினைத்துணை ருசு வும் இல்லை யென்பதை ஆராய்ச்சியுணர்ச்சியும் சிந்தனாசக்தியு முடையவர்கள் எல்லாம் அறிந்தே இருக்கிறார்கள்.

எனவே மேலே கூறப்பட்ட ஆபாச எண்ணங்கள் தம் மக்கள் உள்ளத்தப் பதியும்படி அவர்கள் ஏன் சம்மதிக்கவேண்டும்? ஆட்டுக் குட்டிகளைப்போல் சுதந்திரமான தம் குழந்தைகளை அவர்கள் குருட்டு நம்பிக்கை ஒன்றுகளிடமும் மூட பக்திக்கழுதைப்புலிகளி டமும் என் ஒப்படைக்க வேண்டும்?

நமக்குத் தெரிந்த விஷயங்களையே குழந்தைகளுக்குப் போ திக்கவேண்டும். வெறும் ஊழல்களை ஆதாரமுடைய உண்மைக ளாகக் குழந்தைகளுக்குத் திரித்துக்காட்டவே கூடாது. ஒரு கிறி ஸ்தவன் காங்ஸ்டாண்டி நோபிலில் வசித்தால், முகமது தேவதூதன் என்றும் குர் ஆனே உண்மையான வேதமென்றும் போதனை செ ய்யுமே ஒரு முஸ்லீம் பள்ளிக்கூடத்துக்குத் தன் பிள்ளைகளை அனுப்பவே மாட்டான். ஏனெனில் அவன் முகமதையோ குர் ஆனையோ நம்பவே இல்லை. அதுபோலவே, பைபிள் வேதமாக் கென்று தம் மக்களுக்குப் போதனை செய்ய ஒரு சுத்தகி விரும்ப வே மாட்டான். நாஸ்திகனை விட சந்தேகியே மேலானவன் உண்மையில் கடவுள் உண்டென்றோ இல்லை யென்றோ எவனுக் கும் ருசுப்படுத்த முடியாது. கடவுள் உண்டென்றும், எல்லையற்ற கருணைக் கடலான சர்வ சக்தியுடைய சர்வஞ்ஞானியான ஒன்று பிரபஞ்சத்தை ஆட்சியாளுகிறதென்றும் நம்பப்போதுமான ருசு இல்லை யென்பதே எனது திடமான அபிப்பிராயம்; மற்றபடி கடவு ளைப்பற்றித் தெரியுமென்றுநான் நடிக்கவும் விரும்பவில்லை. நான் வற்புறுத்திக் கூறுவது என்னவெனில் குழந்தைகளின் உள்ளத்தை அசுத்தப்படுத்தக்கூடாது. குழந்தைகளை சோர்மையாகவும் ஒழுங் காகவும் நடத்தவேண்டும். அவர்களது உள்ளம் குறுகும்படி விடக் கூடாது; வளரும்படி வசதியளிக்க வேண்டும். ஆராய்ச்சி செய்ய

வும் பகுத்தறிவுக்குப் பொருத்தமான உண்மைகளை நம்பவும் போதனை செய்யவேண்டும்.

வைதீகர் பள்ளிக்கூடங்களுக்கோ, ஆலயங்களுக்கோ தம் மக்களைப் பகுத்தறிவாளர் அனுப்பவே கூடாது.

நீங்கள் அறிந்த உண்மைகளைக் குழந்தைகளுக்குப் போதனை செய்யவேண்டும். உங்களுக்குத் தெரியாத விஷயங்களைத் தெரியாதென்று குழந்தைகளிடம் தெளிவாகக் கூறிவிட வேண்டும். குழந்தைகள் உள்ளம் விருத்தியடைவதற்கு உங்களாலானதை எல்லாம் செய்யவேண்டும்; அவர்களது வாழ்க்கை பரோபகாரமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்கு உங்களாலான உதவிகள் எல்லாம் செய்யவேண்டும்.

மூடநம்பிக்கைகள் இளம் பருவத்திலேயே குழந்தைகளைப் பற்றிப் பிடிக்க முயலுகின்றன. மந்திரவாதிகளும், பூசாரிகளும், ஜோனிகளும் உங்கள் மக்களை அண்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மதங்கள் எல்லாம் பரம மக்களால் உண்டுபண்ணப்பட்டனவை என்றும், வேதங்கள் எல்லாம் ஈறிவிலிகளால் எழுதப்பட்டனவை என்றும் குழந்தைகளுக்குத் தெரிவித்து விட வேண்டும்.

இயற்கையானதென்று போதனை செய்புங்கள்; உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகும்படி வற்புறுத்துங்கள், மனத்தைப் பீடித்தும் நோய்களும், ஆத்மாவைப் பீடிக்கும் குஷ்டமும் உண்டாகுமென்று இடங்களுக்குக் குழந்தைகளை அனுப்பாதீர்கள். அவர்களது அறிவை விருத்தி செய்ய உங்களாலானதை யெல்லாம் செய்யுங்கள்.

"பெண்கள் சுதந்தரம் பெற்று சுகவாழ்வு வாழவேண்டுமானால் கோஷா வழக்கம் ஒழியவேண்டும். கோஷாப் பெண்கள் கட்டிலடைபட்ட பறவை போல் சிறைவாசம் செய்கிறார்கள். கோஷாப் பெண்கள் அந்தப்புரங்களில் அடைபட்டு மிருகங்கள் போல் வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அறிவு விருத்தியடைய மார்க்கமில்லாமல் இருக்கிறது"

பரோடா மகாராணியார்.

இயற்கை கொடியதா?

(தோழர் எம். டேஷம்பர்ட்து)

துன்பம் உடல் துன்பம் உளத் துன்பம் என முக்கியமாக இரு வகைப்படும். நோய், விபத்துகள் மூலம் உடல் துன்பம் உண்டாகும்; மரண பயம், நம் அன்புக்குரிய சுற்றத்தார், நண்பர் மரணம், அன்புக்குப் பாத்திரமானவர்களைப்பற்றிய கவலை, எதிர் காலத்தைப்பற்றிய சந்தேகம் அல்லது அச்சம், கோபம், பொறாமை, ஆசா பங்கம் முதலிய காரணங்களினால் உளத் துன்பம் உண்டாகும்; அல்லது பிறர் நம்மைப்பற்றிக் கூறும் அவதூறுகளாலும் மனத் துன்பம் உண்டாகும்.

முதலில் உடல் துன்பத்தைப்பற்றி ஆராய்வோம். இயற்கை இரக்க வெறியுடையதெனச் சொல்லப்படுகிறது. பிராணிகள் ஒன்றை ஒன்று தின்று உயிர் வாழ்வதாகவும் சொல்லப்படுகிறது. எனவே ஒரு சிங்கம் அதன் இரையைப் பிடிப்பதுபற்றி பரிசீலனை செய்வோம்.

ஆபிரிக்காவிலே ஒரு காடு. எங்கும் அமைதி நிலவுகிறது. ஒரு பக்கத்திலே புல்லைத் தின்னும் சில காட்டுக் குதிரைகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. சில மர நிழலிலே இளைப்பாறிக் கொண்டிருக்கின்றன; மேய்ந்த பிறகு பசும் புல் தரையில் படுத்திருப்பது அவைகளுக்கு மிக்க திருப்தியளிக்கிறது. சற்றுத் தூரத்திலே, அந்தக்காட்டுக் குதிரை மந்தையிலுள்ள ஒரு அழகான பெண் குதிரையைக்கைப்பற்றும் பொருட்டு இரண்டு ஆண் குதிரைகள் சண்டை போடுகின்றன; அந்த ஆவேசம் அவைகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது; ஒவ்வொன்றும் தனக்கே கடைசியில் வெற்றி கிடைக்குமென நம்பி திருப்தியடைகிறது.

இதற்கிடையில் வெகு தூரத்திலிருந்து ஒரு சிங்கம் திடீரெனப் பாய்ந்து அந்த ஆண் குதிரைகளில் ஒன்றை அடித்துக்கொன்று விடுகிறது.

அந்தச் சிங்கம் தன்னை எதிர்க்குமென்று அடிபட்ட ஆண் குதிரை எதிர்பார்க்கவே இல்லை. ஒரு வேளை அது எதிர்பார்த்தி

ருந்தாலும் சிலவிநாடி நேரமே எதிர்பார்த்திருக்கும். கொலை இமை கொட்டும் முன்னே முடிந்துவிட்டதினால் கொலையைப்பற்றி காட்டுக்குதிரை அறியுமுன்னமேயே அதன் உயிர் போய்விட்டது.

ஒரே அடியில் குதிரையின் உயிர் போயிருக்காவிட்டால் தன் நகங்களினாலோ பற்களினாலோ சிங்கம் வெகு விரைவில் அதைக் கொன்றிருக்கும்.

சிங்கத்தின் பற்களும் நகங்களும் மிகச் சக்தி வாய்ந்தவை. திறமையாகவும் விரைவாகவும் கையாளப்பட்டால் அவை எவ்வளவு பெரிய பிராணியின் உயிரையும் ஒரு விநாடியில் வாங்கி விடும்.

மாமிச பட்சணம் செய்யும் மிருகத்தினால் தாக்கப்பட்ட எந்தப் பிராணியும் உயிர் பிழைப்பததில்லை. சிங்கத்தின் பற்களுக்கும் நகங்களுக்கும் அகப்பட்ட மிருகங்கள் மீளவே முடியாது. பற்களாலும் நகங்களாலும் ஏற்படும் காயம் மகா கொடியவை. எனவே அவஸ்தைப்படாமலே அவை இறந்து விடும்.

பற்களும் நகங்களும் இவ்வளவு கொடியவைகளாக இல்லாவிட்டால் சில அடிபட்ட மிருகங்கள் பதுகாயப்பட்டு தப்பிப்போய் நெடுகாள் கஷ்டப்படக்கூடும். சிங்கத்தின் கையில் அகப்பட்ட மிருகங்கள் அவை மரணத்தைப்பற்றி நினைக்கு முன்னமேயே உயிர் துறந்து விடுகின்றன.

வாஸ்தவத்தில் ஒரு சிங்கம் அல்லது புலியின் கையில் அகப்பட்ட மிருகங்கள் அவஸ்தைப்படுவதே இல்லை. ஒரு மரத்தின் நிழலில் நிற்கும் ஒரு மனிதன் திடீரென்று இடியினால் கொல்லப்படுவது போல சிங்கம் அல்லது புலியின் கையில் அகப்பட்ட பிராணிகளும் நினைக்கும் முன்னே மாண்டுபோகின்றன. எனவே இங்கே கொடுமைக்கு இடமே இல்லை. இயற்கை குரூரமானதுமல்ல. சிங்கங்களுக்கும் புலிகளுக்கும் கூரிய நகங்களையும் பற்களையும் அளித்த இயற்கை வாஸ்தவத்தில் கொடியதல்ல; கருணையுடையதென்றே சொல்ல வேண்டும். மற்ற மாமிச முண்ணும் பிராணிகளும் சிங்கம் புலிகளைப் போன்றவைகளே.

அவை இரைக்காகத் தாக்கும் மிருகங்களுக்கு உடன் மரணம் உண்டாகி விடுகிறது. தம்மை எதிர்க்கச் சக்தியில்லாத பிராணிகளையே அவை தாக்குகின்றன. எனவே தாக்குண்டவுடன் தாக்கப்பட்ட பிராணிகள் உயிர் துறந்து விடுகின்றன.

ஏதேனும் ஒரு காரணத்தினால் தாக்குண்ட பிராணி தாக்கப் பட்ட பிராணியை எதிர்த்து உயிருக்குப் போராடினாலும் தாக் குண்ட பிராணியின் மூளைகலங்கி உணர்ச்சியற்றிருக்குமாகை யினால் தாகுதலினால் ஏற்பட்ட வேதனையை அது உணரவே செய்யாது.

அடிபட்ட பிராணி வேதனையை உணருகிறதா அல்லவா என நமக்கு அறிய முடியாதிருக்கையில் அது துன்பப்படவில்லை என நாம் எவ்வாறு கூறுவதெனச் சிலர் கேட்கக்கூடும். ஆனால் ஒரு விஷயத்தை நாம் முக்கியமாக உணர வேண்டும். சிங்கத்தின் வாயிலிருந்து மீட்கப்பட்ட மக்கள் தமக்கு உடல்துன்பமோ உளத் துன்பமோ ஏற்படவில்லை யென்றே சொல்கிறார்கள்.

ஒரு சிங்கத்தினால் தாக்கப்பட்ட லிவிங்ஸ்டன் எழுதியிருப்ப தாவது:—

சற்றுத் திரும்பிப்பார்த்த போது ஒரு சிங்கம் என் மீது பாய் வதைக் கண்டேன். நான் சற்று உயரமான இடத்தில் நின்றேன். அது என் புஜத்தைப்பற்றி இழுத்தது. நாங்கள் இருவரும் கீழே தரையில் உருண்டோம் மிக பயங்கரமாக கர்ஜித்துக்கொண்டு, ஒரு எலியைப் பூனை பிடித்து ஆட்டுவது போல் என்னை ஆட்டிற்று அவ்வளவு தான், நான் மயங்கித்தான் போனேன். உணர்ச்சியை முற்றிலும் இழந்தேன். ஏதோ ஒரு கனவுலகத்திலிருப்பது போல் உணர்ந்தேன். வேதனையோ துன்பமோ எனக்கு உண்டாக வில்லை. துக்க நடப்பவைகளை யெல்லாம் நான் உணர்ந்தே னும் அச்சமென்பதே அணுவளவும் உண்டாக வில்லை. இதற் குக் காரணம் மனத்தில் ஏற்பட்ட எத்தகைய மாற்றமுமல்ல. சிங்கம் என்னைப்பிடித்து ஆட்டியபோது என் அச்சவுணர்ச்சி அடியோடு நீங்கி விட்டது. எனவே சிங்கத்தைப்பார்த்து நான் நடுங்க வில்லை.

ஆபிரிக்காவில் ஒரு சிங்கத்தினால் தாக்கப்பட்ட வேறு ஆவ னைப்பற்றி ரூஸ்வெல்ட்டு என்பார் "டெய்லி டெலிகிராப்" பத்தி கையில் எழுதியிருப்பதாவது:—ஒரு சிங்கத்தால் தாக்கிக் கடிப்ப தத்தப்பட்ட ஆவனை நான் சந்தித்தேன். காயமடைந்த போது தாம் துன்பப்படவே இல்லையென்று அம் மனிதரும் கூறினார்கள். கொஞ்சநேரம் கழித்த பிறகு தான் அவர்கள் வேதனையை உணர்ந்தார்களாம்.

இதனால் விளங்குவதென்ன? ஒரு பிராணி மற்றொரு பிரா ணியைக் கொல்லும்போது கொல்லப்படும் பிராணி கஷ்டப்படு

வதே இல்லை. இதற்குக் காரணங்கள் இரண்டு. முதற்காரணம் உடனே மரணமுண்டாவது; இரண்டாவது காரணம் அழிபட்ட வுடன் ஸ்தம்பித்துப்போவது.

பாம்பு தீண்டியவர்கள் உணர்ச்சியற்றுப்போவதை நாம் அறி வோம்.

இனி ஆபிரிக்கா காட்டு சம்பவத்தைப்பற்றிப்பேசுவோம். சிங்க த்தினால் அடிக்கப்பட்ட காட்டுக்குதிரை உடன் இறந்துவிட்ட தென்றும் வேதனையையே அறியவில்லையென்றும் வைத்துக்கொ ள்வோம். ஆனால் அந்தச் சிங்கம் காட்டுக்குதிரையை அடித்துக் கொல்வதைப் பார்த்த மற்றக் குதிரைகள் பயந்திருக்கமாட்டாவா? துன்பப்பட்டிருக்கமாட்டாவா? அதனால் இயற்கை கொடியதென் றுதானே சொல்லவேண்டும் எனநீங்கள் சொல்லக்கூடும்.

ஆம், அவை பயந்து துன்பப்பட்டுத்தான் இருக்கும். ஆனால் அந்தப் பயமும் துன்பமும் நெடுநேரம் நிற்பதில்லை. அடுத்த நிமி ஷம் அந்தக் குதிரைகள் அச்சமும் துன்பமும் நீங்கி ஒன்றும் அறி யாதனைனப்போல் மீண்டும் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஆபி ரிக்கா காடுகளில் சஞ்சரித்து அனுபவம் பெற்ற ரூஸ்வெல்ட்டே இதை ஒப்புக்கொள்கிறார்.

இனி, பறவைகளைப்பற்றி கவனிப்போம். அநேக பெண் பறவைகள் ஆண் பறவைகளைக் கொல்லுகின்றன. இலையுதிர்காலம் பெண்கோனீக்கள் ஆண் கோனீக்களைக் கொன்றுவிடுகின்றன. இது கொடுமையல்லவா என்று கேட்கப்படலாம்.

இந்தக் கேள்விக்கு வெகு சுலபமாக விடையளித்து விடலாம். பறவைகளில் பெண்களே ஆண்களை விட வலி பொருந்தியவை களாக இருக்கின்றன. பெண் பறவைகள் ஆண் பறவைகளை விட அதிக காலம் ஜீவித்தும் இருக்கின்றன. ஆண் பறவைகளின் ஜீவ சக்தியை பெண் பறவைகளுக்குப் பாய்ச்சிய உடனே அவை தூர்ப் பல மடைந்து பயனற்றுப் போகின்றன. எனவே இறந்துபோகி ன்றன. அவைகளினால் இயற்கைக்கு இனிப் பயனே இல்லை. அநேக ஆண் வண்ணாத்திப் பூச்சிகளுக்கு இரையெடுக்கவோ ஜீரணி க்கவோ முடியாது. இரையெடுப்பதற்கும் ஜீரணிப்பதற்கும் தே வையான உறுப்புகள் அவைகளுக்கு இல்லை. ஆண் பறவைகளை

விடப் பெண் புழுக்கள் அதிக காலம் ஜீவித்திருப்பதற்கு காரணம் என்னவெனில், முட்டைகள் பருவமடையக் கொஞ்சகாலம்பிடிக்கும், முட்டையை அடைவைக்க ஒரு தகுதியான இடம் தேடவும் கொஞ்சகாலம் பிடிக்கும்; தம் குட்டிகளை வைத்துக்காப்பாற்ற இடம் தயார் செய்பவும் தாய்ப்புழுக்களுக்குக் கொஞ்சம் காலம் பிடிக்கும். குட்டிகளுக்கு இரை தேடவும் பராமரிக்கவும் கொஞ்ச காலம் வேண்டும். இத்தியாதி காரணங்களினாலேயே பெண் புழுக்கள் ஆண் புழுக்களை விட அதிக காலம் ஜீவித்திருக்கின்றன.

மேலும் பயனற்ற ஆண் புழுக்கள் இறந்து போவதைப்பற்றி நீங்கள் சங்கடப்படமாட்டீர்கள். ஆனால் முளைவிட் புழுக்கள் கணவன் புழுக்களைத் தின்பதை நீங்கள் ஆட்சேபிக்கக் கூடுமல்லவா?

வாஸ்தவத்தில் இதில் ஆட்சேபிக்கத் தக்கதாகவோ வருந்தத்தக்கதாகவோ எதுவுமில்லை. ஆண் புழுக்களுக்குக் கருணை காட்டும் பொருட்டே பெண் புழுக்களுக்கு இயற்கை அவ்வளவு அதி தீவிரமான பசியை அளித்திருக்கிறது. ஏனெனில் காதல் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கையில் அல்லது காதலில் மூழ்கி மதி மயங்கியிருக்கையில் தனக்கு நேரப்போகும் துன்பத்தை அறியமுடியாதிருக்கையில் தான் ஆண் புழுக்களைப் பெண் புழுக்கள் தின்று விடுகின்றன. வெகுநாள் உயிரோடிருந்து கிழப் பருவத்தில் கஷ்டப்படுவதை விட நடுப் பருவத்தில் இன்பம் அனுபவித்துக்கொண்டு இருக்கும்போதே இறந்து போவது மேலானதல்லவா! மேலும் புழுக்களின் உடலமைப்புக்கும் முதுகெலும்புடைய பிராணிகளின் உடலமைப்புக்கும் பெருத்த வித்தியாசமுண்டென்பதையும் நாம் உணரவேண்டும். எனவே நமக்கு வேதனையுடையதாகத் தோன்றும் மரணம் அந்தப் பிராணிகளுக்கு அவ்வளவு வேதனையுடையதாக இராது.

இதற்குச் சில திருஷ்டாந்தங்கள் கூறுகிறேன். சில வண்டுகளுக்கிடையில் ஒரு விநோத வழக்கம் இருந்து வருகிறது. ஆண் வண்டு பெண் வண்டைப் புணர முயற்சிக்கும்போது பெண் வண்டுக்கு அடங்காப் பசி யெடுக்கிறது. உடனே பெண் வண்டு ஆண் வண்டின் தலையைத் தழுவுகிறது. அது ஒரு காதல் சேஷ்டையென்று ஆண் வண்டு நினைத்துகொண்டு இருக்கும்போதே பெண் வண்டு அதன் தலையை மெல்லக் கடித்துத் தின்று விடுகிறது. இதனால் ஆண் வண்டுக்குத் துன்பமுண்டாகுமா? உண்டாகாதென்றே நினைக்கிறேன். ஒருகால் துன்பமுண்டானா

லும் அது அனுபவிக்கும் இன்பத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் துன்பம் மிக மிகச் சொற்பமாகவே இருக்கக்கூடும். தக்க ஆதாரமின்றி நான் இவ்வாறு கூறவில்லை. பெண் வண்டு ஆண் வண்டுன் தலையைக் கடிக்கத் தொடங்கின வுடனே அது ஓடி உயிர் தப்பியிருக்கலாம். ஆனால் அது அவ்வாறு செய்யவில்லை. பெண் வண்டு கடிக்கத் தொடங்கிய பிறகும் அதைக் கூடவே ஆண் வண்டு முயல்கிறது. ஏன்? அது காதலில் முழுதும் சொக்கிப்போய் இருக்கிறது. மரண பயம் என்பதே இல்லை. இந்நிலையில் அது மரிக்கும்போது அவஸ்தைப்பட்டதாகச் சொல்லமுடியுமா? நமக்கு அந்த காதல் நாடகம் மிகவும் ஆபாசமாகவும் பயங்கரமாகவும்தான் தோன்றும். ஆனால் அந்த ஆண் வண்டுக்கோ அது இன்பமாகத்தான் இருக்கும்.

ஆண் தேள்களைப் பெண் தேள்கள் தின்னும்போதும் அவை பெண்களை எதிர்ப்பதில்லை. அல்லது தம் விஷக் கொடுக்குகளைக் காட்டிப் பெண் தேள்களை வெருட்டியோட்டுவதுமில்லை. எனவே பெண்கள் தம்மைமத் தின்பதை ஆண்கள் லக்ஷியம் செய்வதில்லை யென்றும் பெண்கள் தின்னும்போது ஆண்களுக்கு வேதனை தோன்றுவதில்லை யென்றும் தோன்றுகிறது.

பெண் தேனீக்கள் ஆண் தேனீக்களையும் மற்றும் தம் சகோதர தேனீக்களையும் கொன்று தின்பதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

கோடை காலம் முழுதும் ஒரு வேலையும் செய்யாது சோம்பியிருந்த ஆண் தேனீ மேலும் உயிரோடிருந்தால் அவை பசி மிகுதியினால் தேனீக் குஞ்சுகளுக்கு பெண் தேனீ வருந்தித் தேடி வைத்திருக்கும் உணவு முழுவதையும் தின்று விடுமென்றும், அவ்வாறு தின்று விட்டால் தேன் கூட்டிலுள்ள தேனீக்கள் எல்லாம் அழிந்து விடுமென்றும் அதனாலேயே சோம்பேறி ஆண் தேனீயை பெண் தேனீ தின்று விடுகிறதென்றும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது.

மற்றொரு காரணம் பின் வருமாறு:— இவ்வருஷம் சோம்பியிருக்கும் ஆண் தேனீ அடுத்த வருஷமும் உயிரோடு இருந்தால் ஏதேனும் ஒரு பெண் தேனீக்குக் கணவனாகக் கூடுமென்றும், அதனால் அதன் சந்ததிகள் பலவீனமடைந்து குடும்பமே நசித்து விடுமென்றும், அதனாலேயே

பெண் தேனீ ஆண் தேனீயைக் கொன்று விடுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

இயற்கை எப்பொழுதும் உத்தமமான பூரண சக்தியுள்ள பிராணிகளையே விரும்புகிறது. எனவே சோம்பேறிகள் வாழ விரும்புவதில்லை.

ஆகவே பிராணிகளுக்கு இயல்பாக வேதனை தோன்றுவதில்லை யென்றும், அவை விரைவாக மரிக்கின்றன வென்றும், நெடுகான் வாழ்ந்து வாழ்க்கை இன்பம் நுகர முடியாமல் கஷ்டப்படுகிறதில்லை யென்றும் நாம் கண்டு கொண்டோம்.

மனிதன் கொடுமைப் படுத்தும் போதுதான் பிராணிகள் துன்பம் அனுபவிக்கின்றன.

பொதுவாகக் குதிரைகளுக்குச் சரியான தீனி கொடுக்கப்படுவதில்லை. கன்றுகளையும் பசுக்களையும் கோடை காலத்து ரயிலில் கொண்டு போகும்போது தாகத்துக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை. கோழிகளைக் கூடைகளில் அடைத்து வைத்து ஹிம்சிக்கிறார்கள். பறவைகளை அனேகர் வேட்டையாடிக் காயப்படுத்துகிறார்கள். எனவே பிராணிகளைக் கொடுமைப்படுத்துவது மனிதனேயன்றி இயற்கை அல்ல.

இதுவரை இயல்பாகப் பிராணிகளுக்கு உடல் துன்பம் உண்டாகிறதா என்று ஆராய்ந்து பார்த்தோம்; இயல்பாக உடல் துன்பம் உண்டாவதில்லை யென்றும் கண்டு கொண்டோம். இனி உளத் துன்பம் உண்டாகிறதா வென்று பார்ப்போம்.

மக்களைப் போல் எதிர் காலத் துன்பங்களை எண்ணி பிராணிகள் மனம் புண்ணாவதே இல்லை. உயிர் வாழும் காலத்து எதிர் காலத்துத் தமக்கு என்ன கேடு மென்றோ மரித்த பின் என்ன கேடுமென்றோ பிராணிகள் சஞ்சலப் படுவதில்லை. இடப்பக்கம் எதாவது வேதனையிருந்தால் ஹிருதய நோயால் வருந்துவதாக அவை எண்ணுவதுமில்லை; வேறு எதேனுமொரு விடத்து நோயிருந்தால் கட்டியுண்டாகப் போகிறதோ என்று சந்தேகப்படுவதுமில்லை. தமது சுற்றத்தார் க்ஷேமத்தைப்பற்றி அவை கவலைப்படுவதுமில்லை. செல்வத்தையோ உத்தியோகத்

ஏதேனும் இழந்து விடுவோமோ என்று அவை வருந்துவது மில்லை. ஏனெனில் சுலபமாகப் பெற முடியாத எதையும் அவை விரும்புவதில்லை. தம் எஜமானோ கண்பனோ கூறிய கொடுஞ் சொற்களை எண்ணி அவை கண்ணீர் வடிப்பது மில்லை. பிராணிகளுக்குள் சிறு சச்சரவுகள் உண்டாவது சகஜமே. ஆனால் வெகு சீக்கிரம் அவை ராஜியாகப் போய் விடும். இரையைப்பற்றிய ஒரே ஒரு கவலை தான் பிராணிகளுக்கு உண்டு. எனவே பலமுடைய பிராணிகள் தின்று வாழ்கின்றன; பலஹீனமான பிராணிகள் இறந்தொழிகின்றன.

பொறாமை, கோபம் முதலியவற்றினால் பிராணிகளுக்குச் சற்று மனத்துன்பம் உண்டாவதுண்டு. அதுவும் ஆண்களுக்கே உண்டாகின்றன. ஒவ்வொரு ஆணும் தன் பெண்ணை மற்றவை தீண்டக்கூடாதென விரும்புகிறது. எனவே தன் பெண்ணை வேறொரு ஆண் கைப்பற்ற வந்தால் முதல் ஆணுக்கு கோபமும் பொறாமையும் உண்டாகிறது. உடனே சண்டை ஆரம்பமாகிறது. இம்மாதிரிச் சச்சரவுகளில் உயிர்ச்சேதம் ஏற்படக்கூடாதென்று பிராணி உலகத்தில் ஒரு பொது விதி இருந்து வருகிறது. எனவே உயிர்ச்சேதம் ஏற்படும் வரை அவை சண்டை போடுவதில்லை. ஜூரண்டில் ஒன்று இலைத்தால் இலைத்தது பின் வாங்கிவிடும். வெற்றி பெற்ற பிராணியும் அத்துடன் திருப்தியடைந்து விடுகிறது. தோற்ற பிராணிகள் உயிரை வாங்க அது எண்ணுவதில்லை. தன் காதலி விஷயத்தில் பிறர் தலையிடக்கூடாதென்பதே அதன் கருத்து. இது நியாயமானது தானே.

பிராணிகளுக்குள் நிகழும் காதற் சண்டை வமிச விருத்திக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. ஏனெனில் பலசாலிகளான பிராணிகளே இணை சேர்ந்து சக்தியை விருத்தி செய்யும்; சந்ததிகளும் பலசாலிகளாக இருக்கும்.

இனி சுதந்தரமாக வாழும் பிராணிகள் அநுபவிக்கும் இயற்கையின்பங்களை ஆராய்வோம்.

உணவு வாளமாகவும் கால நிலை சுபிக்ஷமாகவும் இருக்கும்போது பிராணிகள் உற்பத்தியாகின்றன. குஞ்சுகளையும் குட்டிகளையும் தாய் கவனமாகப் பரிபாலிப்பதினாலும் இரைக்குத் தட்டில்லாமலிருப்பதினாலும் அவை வெகு சீக்கிரம் வளர்கின்றன. பூனைக்குட்டிகளையும் நாய்க்குட்டிகளை

யும் உற்று நோக்கினால் அவை எவ்வளவு உல்லாச வாழ்க்கையை விரும்புகின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

பக்குவமடையும் போது புல்தின்னும் பிராணிகளுக்கு இயற்கையில் இரை தயாராக இருக்கிறது. எதிரிகள் தன் இரையைக் கைப்பற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதே அவைகளின் முக்கியமான கவலை. இரையெடுப்பது, இளைப்பாறுவது, சத்துருக்கள் அடுத்து வரும்போது பதுங்கிக் கொள்வது, சில குறிப்பிட்ட காலங்களில் காதலிப்பது கடைசியில் குட்டிகளைப் பராமரிப்பது முதலியனவே பிராணிகளின் வாழ்க்கை முறையாக இருக்கின்றன. பொதுவாக திடீரென உண்டாகும் கோவிலா மரணத்தினால் அவை முடிவடைகின்றன. தப்பித்தவறி கழப்பருவமடைந்தால் சிங்கம், புலிபோன்ற ஜீவிமை பொருந்திய மிருகங்களுக்கு இரையாகின்றன. அப்பொழுதும் அவைகளுக்கு வேதனை உண்டாவதில்லை.

புல் தின்னும் பிராணிகள் நிலைமை இவ்வாறாக, இனி மாமிச பட்சணிகளின் நிலைமையை கவனிப்போம்.

அவைகளின் வாழ்க்கை பொதுவாக மிக மனோஹரமாகவே இருக்கின்றது.

அவை பொதுவாக போராடியே இரைகளைக் கைப்பற்றுகின்றன. போராட்டத்துக்கு தந்திரம், வன்றி கோபமும் குணம், பொறுமை, தைரியம், திடீரென முடிவு செய்யும் ஆற்றல் முதலிய நற்குணங்கள் வேண்டும்.

இரைக்காகப் போராடுவது மிகவும் ஆனந்தமான வேலை என்பதை நாம் நிச்சயித்துதானாக வேண்டும். நமது முன்னோர்கள் வேட்டையாடியே வயிறு நிரப்பி வந்தார்கள். அந்தக்குணம் இப்பொழுதும் நம்மிடம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. சீமான்களும், ராஜாக்களும் கூட இப்பொழுது வேட்டையாடுவதில் மிக ஆர்வமுடையவர்களாயிருக்கிறார்கள்.

எனவே போராடி இரை தேடும் பிராணிகளின் வாழ்க்கை முறை மிகவும் மனோஹரமானதேயாகும். எனவே கீழ்த்தரப் பிராணிகள் உயிர்வாழ மிகவும் கஷ்டப்படுகிறது என்ற கூற்றுக்கு ஆதாரமே இல்லை. வாஸ்தவத்தில் அவைகளுக்

குப் பூரணமான வாழ்க்கை இன்பம் கிடைக்கிறது. டார்வின் கூறியிருப்பதாவது:—

"இயற்கையில் நிகழும் ஜீவிதப் போராட்டம் சீரற்றதாக னதுமல்ல; கொடுமையானதுமல்ல. அதில் பயமென்பதே கிடையாது. மரணம் திடமென உண்டாகிறது. ஜீவ சக்தியும் உடல் வலியும் உள்ளவை எஞ்சுகின்றன; மற்றவை அழிகின்றன."

மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட அதிகமான இன்பங்களை அநுபவித்தாலும் துன்பம் அதிகமாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் சுயநலம் பற்று, சகோதர உணர்ச்சி இல்லாமை, இயற்கை விதிகளின் கம்பீரத்தை யுணரும் ஆற்றலின்மை, பெற்றோரிடமிருந்து வரும் பரம்பரையாகப் பெறும் தர்க்குணங்களும், பலவீனங்களும் எதிர்காலத் துன்பங்களை எண்ணாமை முன்னாகும் துர்க்குணம் முதலியனவாகும்.

துன்பங்களில் நிழல் காணப்படுவதற்கு வெகு காட்சகுக்கு முன்னரே மனிதன் அஞ்சத் தொடங்கி விடுகிறான்.

மரண பயமும் அவனை சதா வாட்டிக்கொண்டிருக்கிறது.

ஆகவே இயற்கை விதிகளை சரியாக உணர்ந்து இயற்கை வாழ்வு வாழும் மனிதன் முன் வரும்போது அவன் மரணத்துக்கு அஞ்சுவதேயில்லை.

இயற்கை கொடியதே அல்ல; நீதியும் கருணையும் உடையது.

—(o)—

"அனேக சீர்திருத்தக்காரர்கள் பிரசங்க மேடைகளில் சமூக வழுவல்களைப்பற்றி மிக ஆவேசத்துடன் பேசுகிறார்கள், வீட்டில் சென்றதும் அவர்கள் ஆவேசமெல்லாம் தணிந்து விடுகிறது. இதற்கு அவர்களது கோழைத்தனமே காரணம். ஆனால் அவர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை. தம் குற்றத்தை தமது மனைவி, பாட்டி, சகோதரி முதலியோர் தலையில் ஏற்றி விடுகிறார்கள். ஆகையால் சீர்திருத்த விஷயங்களைப்பற்றி பெண்களாகிய நாம் தீவிரமாக சிந்தனை செய்து தீமைகளை ஒழிக்க முற்பட வேண்டும்"

திருவாங்கூர் இளையராணியார்.

மருதையாபிள்ளைக்தும்,
மார்க்கசகாய தீக்ஷிதருக்கும் சம்பாஷணை.

(கோமாளி யெழுதுவது.)

மருதையாபிள்ளை:—வாசங்கய்யா தீக்ஷிதரே! சௌக்கியமா? ரொம்பகாளாக காணமே.

மார்க்க சகாயதீக்ஷிதர்.—ஆமாம், என்ன செய்கிறது? பிழைக்கிறவழி பார்க்கவேண்டாமா?

மருதையா:—நீங்கள் என்ன பாடுபடவா போகிறீர்கள், யாரோ சம்பாதிக்கிறான், எப்படியோ உங்கள் காரியம் சோகாமல் கடத்துவிடுமே, என்ன குறை?

மார்க்க:—பூர்வீகம் போல் எண்ணிக்கொண்டு ஒன்றுக் தெரியாதவர்போல் பேசறீர்களே.

மருதையா:—பூர்வீகமென்ன? கவீன மென்ன? எப்போதும் போலவேதான் உதயம் அஸ்தமனம் ஆகிக்கொண்டே வருகிறது உமக்கு மாத்திரம் என்ன விசேஷப்பட்டு காண்கிறதோ? எனக்கு ஒன்றும் தோணவே இல்லையே.

மார்க்க:—ஆமாம், உமக்கென்ன தெரியவேண்டி இருக்கிறது? எங்களைப்போல தூங்கி விழித்ததும் எங்களையணும், எங்கு கருமாதி என்று வீடு வீடாக அலைந்தாலல்லவோ தெரியும். அப்படித்தான் அலைந்தாலும் முன் போல ஏதாவது மரியாதையுண்டா? இல்லாவிட்டாலும் தக்ஷிணையாவது அணாக்கணக்கில் உண்டா? எல்லாம் வர வரச் சுருட்டுப் போய் விட்டது. அந்த வயித்தெரிச்சலைக் கிளப்பாதேயும். வேறு ஏதாவது பேச்சிருந்தால் பேசுங்கோ.

மருதையா:—என்ன தீக்ஷிதரே, மிக வருத்தமாகவும் சலிப்பாகவும் பேசுகிறீர்கள். ஏதாவது உங்களுக்கு வரவேண்டிய கடனை இல்லை என்று மறுத்து விடுகிறார்களா? அல்

லது யாகிப்பது தவறு என்று ஏறிக்கொள்ளுமாறு செய்கிறார்களா? எனக்கு ஒன்றும் புரிய வில்லை.

மார்க்க:—கடனாவது இழவாவது-எதோ சுபா சுபங்களில் பிராமணனாயிற்றே என்று கொஞ்சமும் தற்கால ஜனங்கள் கணிக்கிறதே இல்லை. தர்ம மில்லை; தக்ஷணை இல்லை; தாம்பூலமில்லை. வர வர மிகவும் கேவலமாகி விட்டது. என்னமோ விருதா செலவாக நினைத்து வருகிறார்களே ஒழிய இதற்கென்னம் பலா பலன் கிடைக்கு மென்பது தோணுகிறதே இல்லை. மகா மோசம். அடைக்கேட்க வேண்டாம்.

மருமையர:—அவனவன் வீட்டு கல்யாண காரியம் கெட்ட காரியங்களில் உமக்கென்ன பங்கு? யார் முதலையாருக்கு இல்லை என்கிறார்கள்! இதில் வரும் பலா பலனென்ன? மீறவும் வருத்தப்படுகிறீர்களே விபரம் விளங்கும்படிதான் சொல்லுங்களேன்.

மார்க்க:—அவர் கல்யாணங்களில் பங்கில்லை விட்டாலும் என்னய்யா தான தர்மமில்லையா, புண்ய பாபமில்லையா? அவர் முதலையாரும் ப்ராம்மணர்—சூத்ரர்கள் இல்லையா, மேல் கீழில்லையா? பெண் பிள்ளைகள் கூட கேவலமாக துச்சமாக நினைத்து பேசற காலம் வந்துட்டதே! உமக் கொன்றும் தெரியாது போல் பேசறேளே, வயித்தெரிச்சலைக் கிளப்பறேளே

மருமையர:—இன்னொருவனுடைய பாப புண்யத்தில் உமக்கென்ன கவலை, நீர் பிராமணனானால் மற்றவர்களுக் கென்ன, அவர் சூத்திரனானால் உமக்கென்ன? மனித வர்க்கத்தில் மேல் கீழ் என்ன? "பெண் பிள்ளை கூட" என சொல்கிறீர்களே, பெண்ணென்றால் கேவலமாக நினைத்துக் கொண்டீரா? இவ்வளவு வயித்தெரிச்சலை நீரே ஏன் உண் டாக்கிக் கொள்ள வேண்டும்? உம்ம அபிப்பிராயத்தை நீர் கவனித் துக்கொண்டு போனால் உமக்கேன் இவ்வளவு வருத்தம் வருகிறது? இதற்கெல்லாம் காரணமே புலப்படவில்லை.

மார்க்க:—நீர் அயோக்யனாகவே இருக்கிறீர். நவீன ஜனங் களைப் போல பேசுகிறதை விட்டு கொஞ்சமும் சாஸ்திர ஞானத்தோடு பேசுவதில்லையே.

மருதையா:—எனக்கு சாஸ்திரக் ஞானமுமில்லை; அதை நான் கம்புகிறதுமில்லை. உமக்கு ஏதாவது வேத ஞானம் இருந்தால் விபரமாகவும் பகுத்தறிவுக்குப் பொருந்து மாறும் சொன்னால் நான் தெரிந்து கொள்ளுகிறேன்.

மார்க்க:—அப்படியானால் விபரமாக சொல்வதைக் கேளும். பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்ற நான்கு வருணங்களுண்டு அதில் பிராமணனுக்கு ஆறு தொழில் உண்டு. அவைகளாவன:— வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்து வைத்தல், தானம் கொடுக்கல், யாசித்தல் என்கிறவைகளாகும். ஆகையால் அவர்களுக்கு யாதிடமாவது சென்று யாசிக்கவேணும் சமயங்களில் மற்றவர்கள் அப்பிராமணர்களுக்கு உபசாரத்துடன் அவர்களுக்கு வேண்டியவைகளை உதவ வேண்டும். பெண்கள் முதலிய துச்சமானவர்களை விட்டு பதில் சொல்லும்படி செய்யக்கூடாது.

மருதையா:—ஓஹோ! யாசிப்பவர்க்கு மரியாதையோடு உபசரிக்க வேண்டுமோ? சரி சரி பெண்களை தாழ்மையாக நினைக்க வேண்டுமோ பேஷ்! நன்றாக இருக்கிறது.

மார்க்க:—உமக்கிதெல்லாம் கேலியாக் காணலாம், அப்படி நினையாதேயும். சாஸ்திரத்தில் அதிதிகளை தெய்வமாக பாவித்துபசரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெண்களை மிகவும் கேவலமாகச் சொல்லி யிருப்பதாகச் சொன்னதால் சம்பாவாட்டீர், அதை வேணுமானால் அப்படியே சொல்லி விடுகிறேன் கேளும்.

"கண்ணருங் கதிவெங் கூற்றரு கரகேழ்
பிறப் பிறப்புறு புனி ரகம்
திண்கரியரி மரவலகை திண்ணுறளி தீவளி
கோடி வெங்தேட்கள்
விண்ணிடியேறுகழு புழு குணபி வேதை செய்வன
வெலாங் திரண்டு
பெண்ணுரு வெடுத்த....." என்றும்,

ஆதிரகான்கு நூறொரு கான்கு பத்தொரு கான்(கு)
எட்டாவறையும்

கோய் கொளவரினுமனையுமக்தோவோர் நுண்
ணிடைப் பெண்ணலம் வேண்டேம்”

என்றும் இன்னும் இதைப்பற்றி பலவாறாகச் சொல்லி இருப்பதை யெல்லாம் அறியாதவராகப் பேசறளே; என்ன சொல்கிறது.

மருதையர்:— இவைகளெல்லாம் தன்னலக்காரரால் எழுதிவைத்துக்கொண்டு ஊரை வயாத்றி வருவதற்கு உபயோகப் படுத்தி வருகிற வழக்கமென்று எனக்குத் தெரிந்தது தான். இம்மாதிரி எல்லாம் இனிசெல்லாது. ஒழுக்கமுள்ளவைகளைக் கைப்பற்றி அவைகளிலுள்ளதை மனதில் வைத்து நடந்து வாருமே.

மார்க்க:— ஆனால் ஒழுக்கமுள்ளதையும் பொதுவலக்காரர் அவ்விடிப்பதையும் நீர் தான் சொல்லுமே பார்ப்போம்.

மருதையர:— ஆனால் சொல்லுகிறேன்கேளும். அதாவது அழையாமல் கண்ட இடங்களுக்குச் செல்லக்கூடாது. அப்படிப்போனால்* “திறந்து கிடக்கும் வாசல்தோறும் நுழைந்திரியும் பதார்த்த”மாக பாவிக்கப்படுவீர். யாரிடமும் ஒன்றும் யாசிக்கக்கூடாது, அப்படிச் செய்வீர்களானால் உம்மை திருடனுக்குச்சமானமாகபாவிப்பார்கள். எப்படி எனில்திருடனும் தனக்குப்பாத்தியமில்லாத மற்றொருவன் முதலை தான் பெறுதிக்கிறான் யாசனும்தனக்கு பாத்தியப்படாதமற்றொருவன முதலை அடைய இச்சிக்கிறான். இதில் இன்னொருவன் முதலை இச்சிப்பதில் இருவருக்கும் பேதமென்ன விருக்கிறது? நீர் சொன்ன பெண்ணைப்பற்றிய இழி சொற்களுக்கும் ஒரு பதில் சொல்லி விடுகிறேன.

“கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம் புலனும்
ஒண்டொடிகண்ணேயுள”

“உலகின் வாழ்க்கை செவ்வனே கடைபெறுதற்குத்தாயகமான டெண்கள் என்பவர்கள் இன்றியமையாதவர்கள்” என்னும் சீரிய பொன்னுரைகளைக் கேட்டிலர் போலும்.

ஆகையால் இன்றுமுதல் எதாவது ஒருநல்ல தொழிலைக் கைடைப்பிடித்துச் ஜீவித்துவாரும். இந்தப் பழய சோம்பேறி வாழ்க்கைகளை இனி கனவிலும் நினையாதீர். உம் மூடன்பழகின தோஷத்திற்கு இவைதான் நான் உமக்குச் சொல்லக்கூடும். நான் போய்வருகிறேன் நேரமாகிவிட்டது.

---

* திறந்து கிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம்=நாய்

பெண்களின் சிருங்காரம்.

(சென்னை கே. எஸ். நாதன்)

1. இங்கிலாந்து தேசத்துப் பெண்கள் காதில் குண்டல மணிவர்.

2. பிரான்சு தேசத்து சர்மண்டிப்பெண்கள் சரிகைத் தொப்பி அணிவர்.

3. ரோமானியா தேசத்துப்பெண்கள் தம் தலைமயிரை சன்காகப் பிரித்து ஜடைப்போட்டுக் கொள்வர்; பலவர்ண மான சரிகையுடைகளைத் தரிப்பர்.

4. ஸ்பெயின் தேசத்துப் பெண்கள் தொப்பி தரிப்ப தோடு, கையில் விசிறியும் பிடித்திருப்பர்.

5. இத்தாலியா தேசத்துப் பெண்களுள் பவளமாலை யணியாதவர்களொருவருமில்லை. இம்மாலை திருஷ்டி தோஷத்தைப் போக்குவதாம்.

6. துருக்கி தேசத்துப் பெண்கள் பலவிதமான கைகளுடை, பட்டுச்சராய், சூல்சராய் முதலியனவு மணிவர்.

7. மேயேரி ஜாதிப் பெண்கள் உடம்புமுழுதும் பச்சை குத்திக் கொள்வர்.

8. ஜப்பான் தேசத்துப் பெண்கள் இடுப்பில் பட்டுக்கச் சையைக் கட்டிக்கொள்வர்.

9. சையாம் தேசத்துப் பெண்கள் பட்டுக்கச்சையை பூணூல் போலத்தரித்துக்கொள்வர்; பலவகையான வர்ண உடைகளில் இவர்கட்கு மிகப்பிரியம்.

10, ஆபி தேசத்துப் பெண்கள் பல்லிற்கு நீலச்சாயமும் சைனா தேசத்துப் பெண்கள் பல்லிற்கு கறுப்புச்சாயமும், ஜப்பான் தேசத்துப் பெண்கள் பல்லிற்கு விவாகமாகும பரியந்தம மஞ்சட் சாயமும், விவாகமான பிறகு கறுப்புச் சாயமும் போடுவார்கள்.

11. மலே ஆர்ச்சி பிலகோ தேசத்துப் பெண்கள் தம் பற்களை கருவியால் தலைசெய்து, அவற்றில் தங்கச்சுரை அல்லது வெள்ளிச்சுரைகளைத் தரிப்பர்.

12. ஆப்பிரிக்கா தேசத்துப்பெண்கள் தம் கங்கட்கு மஞ்சள், சிவப்புவர்ணங்களைப் பூசுவர்.

13. பெருஷியா தேசத்துப் பெண்கள் பெரிதாயும், கனமுமாயுள்ள கைகளைத் தரிப்பதில் மிகுந்த பிரியமுடையவராக விருக்கின்றனர்.

14. இந்து தேசத்துப் பெண்கள் பலவிதமான உடைகளும், ஆணிகளும் தரித்திருப்பதும், அவர்கள் கங்களில் சிகப்புவர்ணமுண்டாக, அவற்றில் அழகு கிலைச்சாந்து பூசுவதும் மிகப்பிரசித்தமாம்.

குறிப்பு:—மேற்கூறியவை அந்தந்த காடுகளில் கடைபெற்ற புராதன வழக்கங்களாகவும், மதவொழுக்கமாகவும் இருந்தன. இப்பொழுது கல்விகற்ற பெண்களிடம் இப்பழக்கங்கள் மாறி வருகின்றன.

ஆஷாட பூதிவேடம கூடாது. அந்தாங்கம் பித்தலாட்டம் உதவாது. ஒன்றையும் ஒரு மூலையில் செய்யப்படாது. இது "சதனுக்கு" திருப்தியளிக்காது.

கைவல்யம்.

ஒழியுங்கள் சாதிக்கட்டுப்பாட்டை—பிறகு இறங்குங்கள் சுயராஜ்யத்திற்கு.

ஆர். கே. ஷண்முகம்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.


தோழர்களே!

நமது பகுத்தறிவுப் பத்திரிகைக்கு முதலாண்டு முடிவு பெற்று, இரண்டாவது ஆண்டில் இத்துடன் மூன்று இதழ்கள் வெளிவந்து விட்டன. சென்ற வருடம் மே மாதம் 1 வது சந்தா செலுத்தி சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்கு 1936 வது ஏப்பிரல் மாதம் 30-ந் தேதியோடு சந்தாத் தொகை முடிவடைகிறதென்றும், ஆதலால் இனி வரும் வருடச் சந்தாத் தொகையை தயவு செய்து 30—4—36 தேதிக்குள் ஆபீசுக்கு வந்து சேரும்படி மணியார்டர் மூலம் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் இதற்கு முன் நான்கு அறிக்கைகள் விட்டோம். தங்கள் மீதுள்ள அன்பு, நம்பிக்கை, பத்திரிகை வளர்ச்சி ஆகிய வைகளை முன்னிட்டு, பாக்கியுள்ள சந்தாதார்களுக்கும், எங்கள் சொந்த நிலவில் நாளது வரை ஒழுங்காக பத்திரிகை அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் இன்னும் கிட்டத்தட்ட 500 சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அனுப்பி வைக்காமலிருக்கிற படியால், எவ்வித லாபத்தையும் எதிர் பாராது மக்களின் அறிவுக்கும், பரிபூரண விடுதலைக்கும், சமத்துவத்துக்காகவும் உழைத்து வரும் நமது "பகுத்தறிவு" பத்திரிகைக்கு சந்தாதாரர்களின் ஆதரவு இல்லாவிடில் எவ்வளவு முன்னேற முடியும் என்பதை தயவு செய்து யோசித்துப்பாருங்கள். வழக்கம் போல் ஜூலை மாதப்பத்திரிகையும் ஒவ்வொரு வருக்கும் அனுப்பியிருக்கிறோம். அன்புடன் ஏற்றுக்கொண்டு பாக்கியுள்ள சந்தாதார்கள், ஜூலை மாத முடிவுக்குள் தங்கள் சந்தாவை தயவு செய்து அனுப்பிவைக்க வேண்டியது. அப்படி சந்தாத்தொகை அனுப்பாதவர்களுக்கு 1936 ஆகஸ்டு மாதம் வெளியாகும் பத்திரிகை முதல் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வி. பி. மூலம் அனுப்பினால் அதிகச் செலவாகும் என்பதை தெரியப் படுத்திக்கொள்ளுவதோடு பணம் அனுப்பும் சந்தாதார்கள் தயவு செய்து தங்கள் சந்தா நெம்பரைத் தெரியப்படுத்த வேண்டியது. தங்களுக்கு மீண்டும் பத்திரிகை தேவையில்லை என்ற கருதினால் தயவு செய்து தெரித்துவிடவும் வேண்டுகிறோம்.

மானேஜர்

சிறந்தமுறை! குறைந்தவிலை!! நிறைந்தசுணம்!!!



6 அணாவுக்கு வி. பி. எடுப்பது

சிரமமாகுமாதலால்! அணா வ்டாம்பு

அனுப்பினால் ஒரு புட்டி அனுப்பப்படும்.

முக்கியமான புஸ்தகங்கள்.

குறைந்த விலை.

இராமாயண ஆராய்ச்சி 1 முதல் 4 காண்டங்கள் சேர்த்து தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0.

கர்ப்ப ஆட்சி, புது ரஷ்யா, புராணங்கள் ஆகிய மூன்றும் ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0.

தபால் சார்ஜ் அணா 0—4—0.

மானேஜர்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

"பகுத்தறிவு"

பகுத்தறிவு பத்திரிகையின் முதல் ஆண்டின் பன்னிரண்டு பிரதிகளையும் சேர்த்து இரண்டு புத்தகங்களாக சாதாரண பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் சொற்ப காப்பிகளே கைவசம் இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்.

பகுத்தறிவு சந்தாதாரர்களுக்கு ரூ. 1—0—0
மற்றவர்களுக்கு 1—8—0

மானேஜர்

பகுத்தறிவு, ஈரோடு.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

சந்தாவில் ஆதாயம்

பிற்றுபவர்களுக்கு சென்ற வருடம் போல் முக்கிய இதழ்கள் கிடைக்காமல் போகும்படி நேரும்.

பகுத்தறிவும் குடி அரசும்

உடன் சேர்த்து வரவழைக்கும்

சந்தாதாரர்களுக்கு ஜூலை மீ வரையில்

உள்நாட்டுக்கு வருஷ சந்தா 3—8—0
வெளி நாட்டுக்கு 5—8—0

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமூசயவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T, எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L, எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம்			0 6 0
ஷி	II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரண சாசனம்			0 4 0
ஷி	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. நாகவன் எழுதியது

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''நான்காம் பதிப்பு'') ...		,,	0 5 0
ஷி காலிக்கோ பயிண்டு ...		,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ பி.)			0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (காண்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபன்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா. இலங்கை உபன்யாசம்	0	0	9
23	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
39.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.